## வடமேல் மாகாண சபை 2023

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வடமேல் மாகாண சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டதுடன் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் முன்வைப்பதற்காக ஆளுனருக்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வடமேல் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தலைப்பு இலக்கம் 213 - மாகாண கல்வித் திணைக்களத்துக்குரிய மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய செலவினமான ரூபா 28,063,378 மற்றும் முற்பண கொடுப்பனவு செலவினமான ரூபா 611,181 நிதிநிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய பட்டோலைகள் தயாரிக்கும்போது தாமத வழுக்களினால் 213 இற்குரிய செலுத்தவேண்டிய செலவினம் மற்றும் முற்கொடுப்பனவுகள் கைவிடப்பட்டுள்ளமையும் 2024 இன் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும்போது 2023 ஆம் ஆண்டில் கூறிய ஒப்பீட்டு ரீதியான | நிதியாண்டிற்குரிய செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தரவுகளை திருத்தி உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கபட்டுள்ளது. | |
| (ஆ) | வடமேல் மாகாண பிரதம அமைச்சின் அலுவலக கட்டிடத்திற்கு உரிய கணக்கு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 76,762,840 ஆன சீராக்கங்களுக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அலுவலக கட்டிடம் ரூபா 76,762,840.00 இற்கான விளக்கமளித்தல்கள் பின்னர் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்விற்கு சரியான தகவல்களை காலரீதியில் சமர்ப்பிக்க வேண்டி இருந்ததுடன் சகல மீதிகளுக்காகவும் உறுதிப்படுத்தல்கள் காணப்படல் வேண்டும். |
| (இ) | நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்று- ஏ.சீ.ஏ 6 படிவத்தில் உள்ள ரூபா 23,152,346,099 கூட்டு தொகையான 07 சொத்து தொகுதிகளின் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான பதிவேடுகள், பட்டோலைகள் மற்றும் பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய கணக்காய்வு சான்றிதழ்கள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சரியான பட்டோலைகள் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படுமென அறிவிக்கபட்டுள்ளது. | கணக்காய்வுக்குத் தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2023 டிசம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 2023/05 என்ற மாகாண திறைசேரி (கணக்குகள் மற்றும் கொடுப்பனவுகள்) வழிகாட்டியின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் தொடர்ந்தும் அறிக்கையிட வேண்டிய நிதியல்லா சொத்துக்கள் இனங்கண்டு அவற்றை என்று சரியான பெறுமதியில் கணக்கீடு செய்ய வேண்டி இருந்த போதிலும், 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் மாகாண ஆயுர்வேத திணைக்களத்திற்காக நன்கொடையாக கிடைத்த | நன்கொடையாக கிடைத்த தண்ணீர் மோட்டார் மற்றும் சக்கர நாற்காலி மற்றும் கைரோ பாத் உபகரணங்கள் சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தண்ணீர் மோட்டார், சக்கர நாற்காலி மற்றும் ஹைட்ரோபாத் உபகரணம் என்பவற்றின் பெறுமதி இடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | தலைப்பு. 260 - பிரதம செயலகத்தின் தளபாட பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் ரூபா 71,175,676 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா. 72,039,616 ஆனமையால் ரூபா 863,940 இணக்கமின்மை காணப்பட்டது. | சொத்துக்கள் பிரதம செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் ஒன்றிணைத்து காண்பிக்கப்பட்டுள்ளது. | தொடர்ந்தும் காணப்படுகின்ற இணக்கமின்மைகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் வடமத்திய மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உளள்கக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.5.1 தலைப்பு 201 – வடமேல் மாகாண ஆளுனர்

#### 1.5.1.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஒக்டோபர் மாதம் 12 திகதிய இலக்கம்; PS/CSA/11-18 என்ற சனாதிபதி செயலாளரின் அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் வடமேல் மாகாண ஆளுநரின் பிரத்தியேக பதவி அணியினரின் 15 பேர்களில் 10 ஊழியர்களுக்கு உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படாது இருக்கும் போது ஆட்சேர்க்கப்பட்டு 2023 மே முதல் டிசம்பர் வரை சம்பளமாக சம்பளமாகக் கூட்டுமொத்தமாக ரூபா 2,407,368 செலுத்தபட்டிருந்தது. | கௌரவ ஆளுநரின் பிரத்தியேக பதவியணி என்ற பெயரில் சாரதி, சமையல்காரர், அலுவலக உதவியாளர் மற்றும் ஏனைய பதவியணியினர் நியமிக்கும் போது, கௌரவ ஆளுநரின் பாதுகாப்பு மற்றும் நம்பகத் தன்மை போன்ற விடயங்களும் தனிப்பட்ட காரணங்கள் ஆகவும் கருதி ஆளுநர் பதவிக்கால இறுதியின் போது இந்த பதவிகள் முடியுறுதலும் என்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இவர்களுக்கு கல்வி தகைமைகளை கவனத்தில் கொள்ளாமல் நியமனம் வழங்குவதற்கு கௌரவ ஆளுநர் கட்டளையிட்டு இருந்ததுடன், அந்த கட்டளையின் பிரகாரம் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### 1.5.1.2 விளைவற்ற / குறைவாக பயன்டுடுத்தப்பட்ட சொத்துக்கள்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆளுநர் அலுவலகத்திற்கு சொந்தமானதாக காணப்பட்ட ரூபா. 13,790,000 என்ற மேசிடன்ச் கார் 2013 ஆம் ஆண்டில் வடமேல் மாகாண பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டதுடன் உரித்து முறைகாக கையளிக்கப்படாதிருந்ததுடன் அந்த வாகனம் மாகாண சபை வளவில் | மேசிடஸ் பென்ஸ் காரின் ஆரம்ப உரித்து ஆளுநர் அலுவலகத்திற்கு உரித்துடையதாக இருந்த போதிலும் 2013 சனவரி 04 ஆம் திகதி பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளதாக | சொத்துக்கள் விளைவற்று அல்லது குறைவாக பயன்படுத்துவதை பயன்படுத்தாது இருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செயற்பாடற்று பாதுகாப்பற்ற நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | அறிவிக்கப்பட்டுள்ளது. | |

### 1.5.1.3 நட்டம் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ---------------------------------------------- | ----------------------------------- | ------------------------------ |
| முன்னாள் ஆளுநர் பயன்படுத்தபட்ட மோட்டார் வண்டி 2020 யூலை 01 ஆம் திகதி விபத்திற்குட்பட்டிருந்ததுடன். அந்த மோட்டார் வண்டியை பழுதுபார்ப்பதற்காக ரூபா 5,286,460 மாகாண சபையினால் செலவிடப்பட்டிருந்த போதிலும் காப்புறுதி நிறுவனத்தில் இருந்து ரூபா 3,865,731 தொகை மாத்திரமே கிடைத்திருந்தமமையால் மிகதி தொகையான ரூபா 1,420,729 சாரதியிடம் இருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2024 மார்ச் 06 ஆம் திகதி வரையிலும் அந்த பணம் அறவிடபட்டிருக்கவில்லை. | அந்த பணத்தை அறவிடுதல் தொடர்பாக சாரதிக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு தொடரபட்டுள்ளதுடன் மீண்டும் வழக்கு 2024 நவம்பர் 27 ஆம் திகதியில் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் அந்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நட்டம் மற்றும் இழப்புக்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 தலைப்பு 202 – மாகாண சபை

### 1.5.2.1 தீர்வுகாணப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ---------------------------------------------- | ----------------------------------- | ------------------------------ |
| வடமேல் மாகாண சபை செயலகத்தின் பயன்பாட்டிக்கு வழங்கப்பட்டிருந்த வண்டி ஒன்று முறையான அங்கிகாரம் இன்றி மாகாண சபையின் பிரதி தலைவருக்கு வழங்கப்படிருக்கும் போது 2002 ஒக்டோபர் 11 அந்த வாகனம் பாதுகாப்பற்ற வகையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போது முழுமையாக தீப்பிடித்து அழிவடைந்தமையால் ஏற்பட்ட நட்டம் 2024 சனவரி 19 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை. | தற்போது அந்த வழக்கு தீர்ப்பின் பிரதி அல்லது காணப்படுகின்ற நிலமை தொடர்பாக தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. | வழக்கு தீர்ப்பின் பிரதி ஒன்றை பெற்று நட்டதிதை அறவிடல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 தலைப்பு 203 - அரசாங்க சேவை ஆனைக்குழு

#### 1.5.3.1 தீர்வு காணப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமேல் மாகாண பிரதம அமைச்சின் செயலாளர் இப்பாகமுவ வலயக்க கல்வி அலுவலக பணிப்பாளருக்கு கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பரிசோதனை சபைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட நிதி நட்டமான ரூபா 2,564,595 தொகை 04 விடய எழுதுவிளையரிடம் இருந்து மாத்திரம் அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போது அதில் ஒரு உத்தியோகத்தரிடம் இருந்து ரூபா 1,084,712 அறவிடபட்டிருக்கவில்லை அவ்வாறே அந்த விசேட பரிசோதனை அறிக்கையின் இலக்கம் 04 பொறுப்புக்கள் கையளித்தல்களுக்கு உரிய நிதி மோசடி தன்மை தொடர்பாக பொருப்பு வாய்ந்த உத்தியோகத்தரின் பெயர் நிரலொன்றுக்குரிய விடயங்களின் பிரகாரம் காண்பிக்கப்படடிருந்த போதிலும் ஏனைய பொருப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருமதி. ஜீ.எஸ்.எஸ். தர்மதிலக்க இடமிருந்து அறவிடவேண்டிய தொகைகள் ரூபா 640,000 தொகை 2024 மே மாதம் வரையில் அறவிடப்பட்டுள்ளதுடன். மேலும் அறவிடவேண்டிய தொகை ரூபா 839,712 ஆக இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | விசேட பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பொருப்பு வாய்ந்த உத்தியோகத்தர் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இப்பாகமுவ வலயக்கல்வி அலுவலகத்தின் நிதி மோசடி தொடர்பாக விசேட பரிசோதனை அறிக்கையின் இறுதியாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் | மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அது தொடர்பாக ஆழமாக பரீட்சித்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அடிப்படையில் மாத்திரமாக கொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளபட்டமையும் அவ்வாறே அதற்காக நீண்ட பரிசோதனை ஒன்று மேற்கொள்ளவேண்டி இருந்தமையும் பரிசோதனை அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான பரிசோதனை ஒன்று மேற்கொண்டதற்குரிய பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**1.5.4 தலைப்பு 210 - வடமேல் பிரதம, வடமேல் மாகாண பிரதம அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல். பொறியியல் சேவை. சட்டம் மற்றும் சமாதானம். கல்வி. உள்ளூராட்சி. மாகாண நிர்வாகம். பொருளாதார மேம்படுத்தல். சுற்றாடல் அலுவல்கள். நீர் வழங்கல். நீர் போக்குவரத்து மற்றும் சுற்றாடல் அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சர்.**

**1.5.4.1 எதிர்பார்க்கப்பட்ட. பூர்த்தி மட்டம் (out put) பெறப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஜனகலா கேந்திரத்தின் கேட்போர் கூடத்தில் நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டுவரை ரூபா 209,673,158 செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இந்த செயற்திட்டம் இடைநடுவில் நிறுத்தபட்டிருந்தது. இந்த கட்டிடத்தை மீண்டும் நிர்மாணிக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2021 ஆம் ஆண்டில் இதே போன்று மீளாய்வாண்டிலும் ரூபா 734,376 செலவினத்தை செய்து பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட போதிலும், முன்னர் காணப்பட்ட நிலைமை தற்போது வரையிலும் காணப்படுவதன் காரணமாக, இந்த செலவினமும் தற்போது பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டு இருந்தது. செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன் சாத்திய வள ஆய்வொன்று | அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சியின் (PPP) மூலம் உத்தேசப்பட்ட கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்காக ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்துள்ளமையும் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றது என்பதை கணக்காய்வு என்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நிதி நெருக்கடி. செயற்திறனாக மற்றும் ஆக்கபூர்வமானதாக. | நிதி பொருளாதாரத்தை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

சரியாக மேற்கொள்ளமையின் மூலம் இந்த நிலமை ஏற்பட்டிருந்தது.

### 1.5.4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வடமேல் மாகாண சபை மற்றும் குருணாகல் மாநகர சபை ஒன்றிணைந்து நிர்மானிக்கின்ற. ஆறு மாடி கட்டிடத்தின் நிர்மாண செயற்திட்டம் | | |
| இந்த ஒப்பந்தம் திட்டமிடப்பட்ட காலத்தில் ஆரம்பிக்கமை மற்றும் தாமதமாகி ஆரம்பித்ததன் மூலம் ரூபா 13,196,156 ஆன விலை முரண்கள் செலுத்த வேண்டி ஏற்பட்டமையால் மாகாண சபை நிதியத்திற்காக மேலதிக செலவின பொறுப்பொன்றை செய்வதற்கு ஏற்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் நிறுவனங்களை ஆரம்பித்தல். கௌரவ ஆளுநரின் கட்டளையின் அடிப்படையில் 2019.12.20 ஆம் திகதி நிறுத்தப்பட்டிருந்தமையும் மீண்டும் கௌரவ ஆளுநரின் 2020.01.06 திகதி ஆரம்பிப்பதற்கு அறிவிக்கப்பட்டமையும் அவ்வாறே. கொவிட் தொற்றுநோய் நிலைமையினால் விதிக்கப்பட்டிருந்த சுகாதார சட்ட விதி நிலைமைகள் மற்றும் வரையறையினால் இந்த இரு தரப்பினருவையும் கட்டுப்படுத்துவதற்கு முடியாமையின் அடிப்படையில் எழுந்த விடயங்களாகும். விலை முரண்களை செலுத்துதல் ஒப்பந்த நிபந்தனையின் பிரகாரம் மாத்திரமாக இருந்ததாக அறிவிக்கபட்டுள்ளது. | செயற்திட்டத்தை குறித்துரைத்த கால எல்லையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்டத்திற்காக ஒப்பந்தகாரருக்கு 2020 திசம்பர் 24 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்த முற்பணம். தொகையான ரூபா 185,124,755 தொகையில் செலுத்தப்பட்ட எட்டாவது (08) பட்டியலில் 24,237,977 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதி முதல் கணக்காய்வு திகதியான 2023 நவம்பர் 28 ஆம் திகதி வரை ஒப்பந்தகாரரிடம் இருந்து அறவிடப்படாதிருந்த முற்பத் தொகை ரூபா 160,886,778 ஆகும். | ஒப்பந்தகாரரின் முற்பணத்தை அறவிடும் திட்ட முறைமை ஒப்பந்த நிபந்தனை 14.2 இல் தெளிவாக காண்பிக்கப்பட்டுள்ளமையும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும். ஒப்பந்தகாரர் பூர்த்தி செய்த பின்னர் நிலுவை முற்பணத்தை அறவிடுவதற்கு ஆரம்பித்தல் குறித்துரைத்த வங்கிக்கு அறிவிக்கப்பட்டு இருந்தமையும், ஒப்பந்தகாரரால் இடைக்கால கட்டளையை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் பெற்று இந்த முற்பணம் மற்றும் செயலாற்றல் பிணை முறியை அறவிடுதல் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதுடன், அந்த செயற்பாடுகள் முடிவடைந்தவுடன் அதனை அறவிடும். தீர்மானம். இறுதி கொடுப்பனவு சான்றிதழ் மூலம். சேவை பங்களிப்பாளரின் சகல உரிமைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் இந்த முற்பணம் தொகை செலுத்தியதன் பின்னர் மாகாண சபைக்கு தீர்தல் ஒப்பந்தம் பூர்த்தி செய்யபடாமல் மேற்கொள்ள முடியாதிருந்ததை குறிப்பிடப்பட்டுள்ளது. | செலுத்தப்பட்ட முன்பணத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | முற்பணத்தை செலுத்தும்போது முதலாவது முற்பணத்துக்கு உரியதான ரூபா 92,562,377 இற்காக றெமதிசேர் வரி 15 சதவீதம். இதற்காக ரூபா 13,884,356 செலுத்தப்பட்டிருந்ததுடன் | பட்டியல்கள் செலுத்தும் போது செலுத்த வேண்டிய தொகைக்கு முன்னர் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி சதவீதம் சேர்க்கப்பட்டு செலுத்தப்படல் வேண்டும். | குறைத்துரைத்த விகிதத்தின் பிரகாரம் வரி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிட நிர்மாணம் ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்துக்கு முன் பெறுமதி சேர் வரி 08 சதவீதம் வரை குறைத்து காண்பிக்க பட்டமையால் முற்பணத்திற்கான வரிக்குரிய ரூபா 7,404,990 ஆனமையால் VAT வரியாக மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளத் தொகை ரூபா 6,479,366 ஆகும். | அரசாங்கத்தால் அவ்வப்போது பெறுமதி சேர் வரி வீதம் மாற்றப்படும் போது அந்த பெறுமதி சேர் வரியை விடுவித்தல் எங்களால் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் அதற்காக முழுமையான அதிகாரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் உள்ளதை அறிய உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் ஒப்பந்த உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 15(1) மற்றும் 15 (2) (a) (b) இல் குறிப்பிடப்பட்ட காரணத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் இரத்து செய்ய முடியுமாக இருந்ததாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதி ஒப்பந்தத்தை முடிவுருத்துதல் (Termination) அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஒக்டோபர் 06 ஆம் திகதி வங்கி பிணை முறியும் விடுவிக்குமாறு வடமேல் மாகாண பிரதம அமைச்சின் செயலாளரால் வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. 2022 ஒக்டோபர் 14 திகதி ஒப்பந்தகாரரால் பிணைமுறி பணம் விடுவித்தல் கைவிட பட்டமையால் நீதிமன்ற கட்டளை பெறப்பட இருந்த போதும் அது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் 2023 மே 31 ஆம் திகதி தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வடமேல் மாகாண பிரதம அமைச்சரின் செயலாளரின் பெயரில் ஆன | ஒப்பந்தகாரரால் 2022 ஒக்டோபர் 14 திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நேரடியாக வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன். 2023 மே 31 ஆம் திகதி அந்த வழக்கின் தீர்ப்பு வெளியிடப்பட்டு ஒப்பந்தகாரரிடமிருந்து கோரல் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அத் தினமே பிரதம அமைச்சரினால் வங்கிக்கு உரிய பிணைமுறி பணமாக்கி தருமாறு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கூட்டு மொத்தமான ரூபா 260,618,293 பெறுமதியான 03 பிணை முறிகளை விடுவித்து கொள்வதற்கு உரிய சந்தர்ப்பத்தின் போது பொறுப்பு வாய்ந்த தரப்பினர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.5.5 தலைப்பு 211 - வடமேல் மாகாண உள்ளூராட்சி திணைக்களம்

#### 1.5.5.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1966 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வடமேல் மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் விநியோகிக்கப்பட்ட ரூபா 3,325,756 கூட்டுத் தொகையான 07 மிகை கட்டண சான்றிதழ் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் பொறுப்புவாய்ந்த தரப்பினரால் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 03 உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய 07 மிகை கட்டண சான்றிதழ் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள தீர்மானத்தின் பிரகாரம் அறவிட வேண்டியிருந்த நடவடிக்கைகள். எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அமுல்படுத்தபடுவதாக அறிவிக்கபட்டுள்ளது. | மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.6 தலைப்பு 212 - வடமேல் மாகாண பொறியியலாளர் திணைக்களம்,

#### 1.5.6.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டு பிகல்போல சுகாதார மருத்துவ அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக தனியார் கம்பனி ஒன்றுடன் ரூபா 21,472,169 ஒப்பந்த பெறுமதியில் உடன்படிக்கை செய்து 2023 நவம்பர் வரையில் ரூபா 16,196,304 வேலைபகுதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 6,060,918 விலை முரண்கள் | கணக்காய்வு ஐய வினாவிற்காக பதிலளிப்பதில் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் இருந்து கிடைக்காதமையினால் அதற்காக விரைவாக பதிலை பெற்று விரைவாக பதிலளிக்கப்படும் என அறிவிக்கபட்டுள்ளது. | செயற்திட்டத்தை நிறைவேற்றும் பொருளாதார நிறைவேற்றுதல். பொருளாதார ரீதியாக செயற்திறனாகவும் வினைத்திறனான முறையிலும் எதிர்ப்பார்க்கப்பட்ட நலன்களை பூர்த்தி செய்வதற்கு இயலுமான வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்துவதுடன் கூட்டுமொத்தமாக ரூபா 22,257,222 செலுத்தப்பட்டமையால் விலை முரண்கள் ஒப்பந்த பெறுமதியில் 28 சதவீதமாக இருந்தது. இந்த ஒப்பந்த உடன்படிக்கையை இரத்து செய்து ஒப்பந்தகாரர் ஒப்பந்தத்தை ஒப்பந்தகாரரிடம் இருந்து விலகியதன் காரணமாக மிகுதி வேலைகளுக்காக மீண்டும் கேள்வி கோரி வேறொரு தனியார் நிறுவனத்துடன் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்ட மையால் அந்த பணிகள். 01 வருடம் 07 மாத காலம் தாமதமடைந் திருந்த துடன் ஆற்றப்பட்ட வேலைக்காக ஆரம்ப கிரயம் ரூபா 626,000 மீண்டும் செலவிட வேண்டி ஏற்பட்டமையால் அரசாங்கத்திற்கு அந்தத் தொகையில் நட்டம் ஏற்பட்டு, அந்த தொகை யினால் நட்டம் ஏற்பட்டிருந்த துடன் முதலாவது சந்தர்ப்பத்தில் ரூபா 3,282,270 ஆன மிகுதி வேலைகளுக்காக புதிய ஒப்பந்தகாரருடன் ரூபா 16,698,451 ஒப்பந்த பெறுமதியில் உடன்படிக்கை செய்ய வேண்டி ஏற்பட்டமையால் அரசாங்கத்திற்கு ரூபா 13,416,182 நட்டம் ஒன்றை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | | நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொண்ட ஒப்பந்தப் பெருமதி, ரூபா 155,911,068 ஆண்டுக்கான கொக்கரல்ல மாவட்ட வைத்தியசாலையின் ஆரம்ப சிகிச்சை அலகை நிர்மாணிப்பது தொடர்பான | கட்டிடத்தின் Slab வெளியில் தெரியக்கூடிய அளவில் காணப்பட்டமை, கட்டிடத்தின் கதவு யன்னல் மூடப்பட்டிருந்ததன் காரணமால் அதிக உடைவுக்கு உட்பட்டமை, டாயில் கல், | நிர்மாணங்களின் குறைபாடுகளைக் குறைக்கும் வகையில் நியமங்களுடன் மேற்கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பௌதிக பரிசோதனையின் போது. Record Room (அறிக்கை அறை), சிகிச்சை கட்டிடம், இரத்தப் சேகரிப்பும் பிரிவு, சிற்றூழியர்கள், ஓய்வு அறை போன்ற இடங்களில் சுவர்களில் வெடிப்பு மற்றும் உடைவு காணக்கூடியதாக இருந்ததுடன் சிற்றூழியர் ஓய்வு அறையில் குளியல் அறையில் டயில் வெடித்திருந்தமை மற்றும் வைத்தியசாலை பணிப்பாளர் அறையில் சுவருக்காக பயன்படுத்தப்பட்ட டயில் உடைந்திருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது, | கொங்கிரிட்களின் உஸ்ணம் வெப்பனிலை மாற்ற மடைந்தமை ஒப்பந்தகாரின் நிர்மான குறைபாடுகளின் காரணமாக உடைதல் மற்றும் வெடிப்புகள் ஏற்பட்டிருந்ததுடன் குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்க எடுக்கப்படுகிறது. | |

### 1.5.7 தலைப்பு 213 - வடமேல் மாகாண கல்வி திணைக்களம்

#### 1.5.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசம்பர் 29 திகதி இலக்கம் 13/2008(vi) என்ற அரச நிறுவாக சுற்றிக்கைக்கு இணங்காத வகையில் வளங்கப்பட்ட உத்தியபூர்வ வாகனங்கள் உறித்துள்ள உத்தியோக்கத்திர்களுக்கு உரித்தான மாதாந்தம் உரித்தான எரிப்பொருள் 135 லீட்டரை விஞ்சி ஓய்வுபெற்ற மாகாண கல்வி பணிப்பாளரால் பிரதம செயலாளரின் அங்கிகாரம் இன்றி ஓய்வுபெற்ற ரூபா 1,628,735 எரிபொருள் லீட்டரை 4243 கடந்த ஆண்டின் போது 03 குழாம் வாகனங்களுக்காகப் பெறப்பட்டிருந்தது. | 2023.04.01 திகதி முதல் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கை பிரகாரம் அமுல்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்க எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 பெப்ரவரி 25 திகதி இலக்கம் 05/2019 என்ற கல்வியமைச்சு சுற்றறிக்கை பிரகாரம் 2020 ஆண்டிலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பணம் புலமைப் பரிசு பெறுவர்களை இனங்கண்டு கொடுக்கப்படாமல் 168 சந்தர்பங்களுக்குறிய 04 வலயங்களில் ரூபா 2,612,744 வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கணக்கு இலக்கம் பிழையாக இருந்த புலமைப் பரிசில் தகவல்கள் சரி செய்யப்பட்டு அனுப்புமாறு பாடசாலைகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | மாணவர் உதவி பணத்தை செலுத்த வோண்டிய புலமைப் பரிசிலாளர்களை சரியாக இனங்கண்டு அந்தக் கொடுப்பனவுக்குறிய மாணவர்களுக்கு வளங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மாகாண நிதிவிதி 54.4 இன் பிரகாரம் 2020 சனவரி 03 ஆந்தகதி தினைகளத்தின் அங்கிகாரம் அனுமதியின்றி சாரதியால் ஓடிச்செல்லப்பட்டு தம்புள்ளை வீதியில் சமன்புர பிரதேசத்தில் விபத்திற்கு உட்பத்திருந்த வேண் வண்டியை மீண்டும் சரி செய்வதற்கு மாகாண சபையின் நிதி ஏற்பாட்டில் ரூபா 1,436,000 செலவடப்பட்டிருந்து. மேற்கூறப்பட்ட வாகனம் பூரண காப்புறுதி மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சாரதி குடிப்போதையில் இருந்த காரணத்தால் இலங்கை காப்புறுதி கூட்டுத் தாப்பனம் ரூபா 403,650 தொகை மாத்திரமே மீழலிப்பு செய்திருந்தது. அதன் பிரகாரம் இது தொடர்பாக 2024 ஏப்ரல் 10 திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த சாரதி வேலை நீக்கத்துக்கு உட்பத்ததிலிருந்து கால எல்லைக்குரிய நிலுவை சம்பளம் செலுத்தாமையின்கீழ் உடனடியாக அமுள்படியும் வகையில் ஒழுக்காற்று கட்டளையின்கீழ் மீண்டும் சேவையில் ஸ்தாப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன்போது வேண் வண்டிக்கு ஏற்பட்ட மொத்த நடத்தையும் காப்புறுதிக் கம்பனியால் மீளளிப்புச் செய்யப்பட்ட ரூபா 403,650 தொகை குறைக்கும் போது கிடைக்கின்ற மிகுதி தொகையான ரூபா 1,391,350 நட்டம் உடனடியாக தினைக்களத்துக்குச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | மாகான நிதிவிதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2017 ஏப்ரல் 09 திகதிய இலக்கம் 03/2017 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரச ஊழியர்களும் தமது சேவை நிலையத்துக்கு வருகைதரல் மற்றும் வெளிச்செல்லல் | எந்தவொரு பாடசாலையிலும் கைவிரல் அடையாளம் இடும் இயந்திரம் பயன்படுத்தப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கைவிரல் அடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் எந்த ஒரு பாடசாலையிலும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**1.5.7.2 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விசேட கல்வி தேவையான மாணவர்களின் நடவடிக்கைக்கு பயன்படுத்துவதுக்காக அளகொண்டு ரூபா 12,900 ஆன (VAT உடன்) Gymball 100 (ஜிம்போல் 100) ரூபா 1,290,000 செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டருந்தத்து. எனினும் குறித்துரைத்த மாதிரிகள் சமர்ப்பிக்காமல் கூரு விலை கோரி ரூபா 2,400 ஆகக் குறைந்த விலையின்குள் சமர்ப்பித்த நிறுவனம் நிறாகரிப்பதற்கு முன்னர் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திலிருந்து கேள்வி மதிப்பிட்டத்துக்காக தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு மதிப்பிடு மேற்கொள்ளாமையின் காரணமாக ரூபா 1,050,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | இரண்டு நிறுவனங்களும் சமர்ப்பித்துள்ள கேள்விகளுக்குடைய ஆககூடிய கூருவிலை உள்ள (ட்ரம்போலின் உபகரணம்) நிறுவனத்திற்கு நிறுவனத்தில் உரிய உபகரணங்கள் தொடர்பான தெளிவான விபரங்கள் மற்றும் உபகர்ணத்தின் படங்கள் வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. தொலைபேசி அழைப்பு மற்றும் Email செய்தி மூலம் அறிவிக்கப்பட்டுருந்த போதும் அதற்கான பதில் கிடைக்காதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை நோக்கங்களுக்கு இணங்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்திற்குரிய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.7.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாகான கல்வி தினைக்களத்துக்குறிய 1215 காணி அலகுகளில் 61 அலகுகள் மாத்திரம் ரூபா 933,625,750 தொகையில் மதிப்பீட்டு தினைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட போதும் எஞ்சிய 1,154 காணி அலகுகள் கல்வி | பதிலளிக்கப்படவில்லை. | பெறுமதி சரியாக மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தினைக்களத்தால் ரூபா 44,968,590,125 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது அதன் பிரகாரம் 1,154 காணி அலகுகள் முறையாக மதிப்பீடு மேற்கொள்ளப்படாமல் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மாகாண கல்வி தினைக்களத்துக்குரிய 03 வலயங்களுக்கு உரிய 364 பாடசாலைகளில் அந்த நிலத்தின் / காணிகளின் உரித்தை உறுதிப்படுத்தி கொள்வதற்கு 2024 பெப்ரவரி 20 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் காணி உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறுவிக்கப்பட்டுள்ளது. | காணியின் உரித்தை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2015 ஏப்ரல் 22 ஆம் திகதி நடைபெற்ற ஆறாவது மாகாண சபையின் முதலாவது அமைச்சரவை தீர்மான இலக்கம் 61/அ.மா/2015/30 என்ற தீர்மானத்தின் பிரகாரம். வடமேல் மாகாணத்தின் பாடசாலைகளில் அதிபர் தரங்கள் இடமாற்றல் நடைமுறையை அமுல்படுத்துவதுடன் அதன் பிரகாரம் ஒரே பாடசாலை 05 வருடங்களுக்கு மேல் அதிபர் சேவை காலத்துடன் அதிபர்களுக்கு இடமாற்றம் வழங்க வேண்டி இருந்த போதிலும். வடமேல் மாகாணத்தில் அதிபர்களின் இடமாற்றக் கொள்கை முறையாக அமுள்படுத்தப்படாமையால் குருணாகல் வலயத்தில் மாத்திரம் 05 வருடங்களுக்கும் 14 வருடங்களுக்கும் இடையிலான காலம் ஒரே பாடசாலையில் சேவையாற்றுகின்ற 72 | அந்த அதிபர்களின் இடமாற்றம் 2024.06.03 திகதி அமுல்படுத்துவதுக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் போது குருணாகல் வலயத்தில் 05 வலயங்களுக்கும் 14 வலயங்களுக்கும் இடையிலான காலம் ஒரே பாடசாலையில் சேவை ஆற்றிய அதிபர்களுக்காகவும் இடமாற்றல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2015 ஏப்ரல் 22 ஆம் திகதி நடைபெற்ற ஆறாவது மாகாண சபையின் முதலாவது அமைச்சரவை கூட்டத் தீர்மானம் இலக்கம் 61/அமா/2015/30 என்ற தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கையெடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிபர்கள் காணப்பட்டனர். | | |
| (ஈ) | இரண்டாம் நிலை சார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இழக்கிடப்பட்ட பாடங்களை அபிவிருத்தி செய்வதற்காக பாடசாலைகளின் அடிப்படைகளை வழங்குவதன் கீழ் 7,425,000 வழங்கப்பட்டிருந்தது. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 05 பாடசாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,700,000 தொகை ரூபா 1,870,380 தொகை கணக்காய்வு திகதியான 2023 யூலை 10 வரையில் கணக்கில் பயனற்று சேமிக்கப்பட்டிருந்தது. | இந்த செயற்றிட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட பணத்தை செலவிடாதிருக்குமாயின் உடனடியாக செலவீனங்களை செய்து பூர்த்தி செய்யுமாறு 2023.08.09 திகதிய கடித மூலம் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | கிடைக்கின்ற நிதியேற்பாடுகளுக்கு உச்ச நலன்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இரண்டாம் நிலை கல்விசார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம். (SESIP) இன் கீழ் பாடசாலைகளை புத்தாக்க ஆய்வு கூடங்களை ஸ்தாபித்தல் மற்றும் அமல்படுத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் ரூபா 52,000,000 தொகையன்று வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதி ஏற்பாட்டில் ஒரு பாடசாலைக்காக ரூபா 800,000 வீதம் 65 பாடசாலைகளுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிதி செயற்பாட்டில் செலவிடப்பட்ட முறை அல்லது அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் தொடர்பான எந்தவொரு பின்தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு இருக்க வில்லை. அவ்வாறே வடமேல் மாகாணத்தில் குருணாகல் | மாகாணத்தில் 65 பாடசாலைகளில் நிரந்தர உபகரணங்களை, நிலையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 32,500,000 தொகையில் ரூபா 25,687,434.14 தொகை 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை செலவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி ரூபா 6,812,565 நிதி ஏற்பாடு சேமிக்கபட்டுள்ளது. இந்த பணத்தை செலவிட வேண்டிய இறுதித் திகதி 2024 டிசம்பர் 31 ஆக நீடிக்கப்பட்டுள்ளது. 65 மாகாண பாடசாலைகளின். பெறுமான தேய்வுக்காக. ஒதுக்கப்பட்ட அழிவடையும் பொருட்களுக்காக. ஒதுக்கப்பட்ட ரூபா 19,500,000 தொகையில் | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நிதியம் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| வலயத்தில் கணக்காய்வு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு 05 பாடசாலைகளின் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 4,000,000 நிதி ஏற்பாடுகளில் ரூபா 2,325,923 நிதி ஏற்பாடு சேமிக்கபட்டிருந்தது. | ரூபா 4,555,494 தொகை செலவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 14,944,506 நிதி ஏற்பாடு சேமிக்கபட்டுள்ளது. |

### 1.5.8 தலைப்பு 220 - வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், காணி, மின்சாரம், மின்வலு மற்றும் வலுசக்தி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள், கலாசார மற்றும் கலை அலுவல்கள், தகவல் தொழில்நுட்ப அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சு

#### 1.5.8.1 தாமதமான செயற்திட்டம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் வடமேல் மாகாணத்தில் நலனாளிகளுக்காக சூரிய வலு மின் கட்டளை தொகுதியை வழங்குதல் மற்றும் ஸ்தாபிப்பதற்காக உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 8,750,186 பெறுமதி உடைய உடன்படிக்கையின் பிரகாரம் 2023 டிசம்பர் 11 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்ய வேண்டி இருந்த போதிலும், அத் திகதியிலிருந்து நான்கு தடவை மேற்கொள்ளப்பட்ட தின நாள் நீடிப்புக்களின் பிரகாரம் 2024 மார்ச் 31 வரையும் நாள் நீடிக்கப்பட்டிருந்த போதும் கணகக்ாய்வு திகதியான 2024 ஏப்ரல் 02 திகதி வரையிலும் இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்து கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | செயற்திட்டத்தின் சூரிய வலு துணை பாகங்களை ஸ்தாபித்தல். நாட்டில் காணப்படுகின்ற இறக்குமதி கட்டுப்பாட்டினால் தாமதமடைந்து இருந்ததுடன் மின்சார துணை பாகங்கள் இந்த நாட்டிற்கு கொண்டு வந்து ஸ்தாபிக்கும்போது மேற்பார்வை நடவடிக்கைகள் தாமத வழுக்களினால். பிரதேச பொறியியலாளர் - புத்தளம் இற்கு கையளிக்கப்பட்டதுடன் பின்னர் அந்த சூரியகல மின் முன்மொழிவு திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அதற்கு குறித்துரைத்த பிரதேச பொறியியலாளர் பிரிவுகளில் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மேற்பார்வை நடவடிக்கைகளை | தேவையற்ற முறையில் நாட்களை நீடிக்காமல் விரைவாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்வதுடன், இந்த செயற்திட்டத்திற்காக தொடர்புடைய நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றமையால் காலவீச்சு போதிய அளவில் இல்லாமையின் அடிப்படையில் மீண்டும் உடன்படிக்கைக் காலம் நீடிக்கபட்டுள்ளதுடன் கூடிய விரைவில் இந்த செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**1.5.9 தலைப்பு 221 - கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்.**

**1.5.9.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1972 இன் 05 இலக்க கூட்டுறவு சங்க சட்டம் மற்றும் 1973 இன் கூட்டுறவு விதி 43 (i) மற்றும் 43(ii) பிரவுகளின் பிரகாரம் கூட்டுறவு உதவி ஆணையாளர். 04 கூட்டுறவு உதவி ஆணையாளர். பிரிவுகளுக்குரிய பதிவுசெய்யப்பட்ட 677 சங்கங்களில் கூட்டுறவு நிதியத்தின் நிலுவை பங்களிப்பு பணமான ரூபா 113,462,281 தொகை 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் மேலும் அறவிடவேண்டிய நிலுவை பண பங்களிப்பு மீதி ரூபா 79,335,136 ஆக அறிவிக்கபட்டுள்ளது. | 1972 இன் 05 இலக்க கூட்டுறவு சங்க சட்டத்தின் 43 (i) பிரிவு மற்றும் 1973 இண் கூட்டுறவு வீதி 43 (ii) பிரதான கட்டளை பிரிவின் பிரகாரம் நிதியத்திற்கு அறவிடவேண்டிய நிலுவை பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1972 இன் 05 ஆம் இலக்க கூட்டுறவு சங்க சட்டம் மற்றும் 1973 இன் கூட்டுறவு விதி xi ஆம் அத்தியாயத்தின் 58 மற்றும் 59 பிரிவுகள் மற்றும் விதி 49 (v) (இ) பிரிவுகளின் பிரகாரம் மாஹோா மற்றும் | அவதானிப்புகளுக்கு உரிய பதில் வழங்கப்படவில்லை. | கூட்டுறவு சங்க சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

குளியாப்பிட்டி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்கு உரிய முறையே 287 மற்றும் 93 கோவைகளும் கடன் மற்றும் பல்வேறு பிரச்சினைகளுக்கு உரிய ரூபா 50,078,991 பெறுமதியான. 380 மொத்த கோவைகளும் 01 மாதம் முதல் 31 மாதங்கள் வரையான கால தாமதத்துடன் காணப்பட்டமையும் காணப்பட்டதுடன் தீர்ப்பு தேர்வும் வழங்கப்பட்டு இருக்கவில்லை.

### 1.5.9.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு உதவி ஆணையாளர் பிரிவுகள், 04 இல் அமைந்துள்ள 61 கூட்டுறவு சங்கங்களில் பொறுப்புவாய்ந்த 149 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 88,381,074 ஆன நிதி மோசடி மற்றும் பண குறைவு மீளாய்வண்டின் இறுதிவரையில் இறுதி அளவில் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய விசாரணைகள் மேற்கொள்ளல் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | மாகோவிலிருந்து ரூபா 3,742,548 கம்பஹா, குளியாப்பிட்டிய இல் இருந்து ரூபா 9,775,490 தொகையும் அறவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கபட்டுள்ளது. | விசாரணை நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து அறவிடுவதற்கு உள்ள பணம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 1973 இன் கூட்டுறவுச் சங்க விதி. கோவையின் 49 (V) (ஈ) என்னும் பிரிவின் பிரகாரம் ஏதாவது பிணக்குகள், தீர்ப்பாளருக்கு பிணக்குகள் தீர்த்தல் தொடர்பான செயற்பாடுகள் எடுக்க முடியாமை. அடிப்படையில் தமக்கு அனுப்பபடுகின்ற ஆவணங்களை உடனடியாக பதிவாளருக்கு மீள கையளிக்க | தீர்க்கப்படாத பிரச்சனையான கோவைகளை தீர்ப்பதற்காக நியமிக்கப் பட்டிருந்த உத்தியோகத்தர்களினால் அவர்களின் கடமை நடவடிக்கைகள் மற்றும் தனிப்பட்ட வசதி ஈனத்தால் தேர்வு வழங்கப்படாமல் மீண்டும் | கூட்டுறவு விதி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேண்டியிருந்த போதிலும் மாகோ மற்றும் குளியாப்பிட்டி உதவி ஆணையாளர் பிரிவுகள் இரண்டிற்குறிய 04 சங்கங்களுக்குரிய பெறுமதி ரூபா 4,233,588 ஆன 18 கோவைகள் 06 மாதங்களுக்கும் 13 மாதங்களுக்கும் இடையிலான காலம் கையில் வைத்திருந்து எந்தவொரு தீர்வும் வழங்கப்படாமல் மீண்டும் கையளிக்கப்பட்டிருந்தது. | கையளிக்கப்பட்டுள்ளதுடன், அந்த உத்தியோகத்தர்களுக்கு இந்த தீர்ப்புக்குரிய கோவைகளுக்கு மேலதிகமாக கோவைகள் வழங்கப்படவில்லை. | |

**1.5.10 தலைப்பு 222 - காணி ஆணையாளர் திணைக்களம்.**

**1.5.10.1 வருமான முகாமைத்துவம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வடமேல் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனங்கள் மற்றும் 55 நபர்களிடமிருந்து அறவிடவேண்டிய நிலுவை. நீண்ட கால வாடகை பெறுமதி ரூபா 107,864,841 ஆகும். | மீளாய்வு ஆண்டின் இறுதியில் அறவிடவேண்டிய மீதி சரியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | அறவிடவேண்டிய நிலுவை வாடகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.10.2 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வளங்கள்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குருணாகல் பிரதேச செயலகப்பிரிவிற்குரிய இலக்கம் 839 நகர மத்திய கிராம உத்தியோகத்தர் பிரிவில் மல்கடுவாவ கிராமத்தில் மு.பி.கு 736 என்ற நிலக்கூறு இலக்கம் 01 அளவு 01 ஏக்கர் 4.3 பேர்ச் காணி பகுதி காணி ஆணையாளர் நாயகத்தின் 2014 டிசம்பர் 30 ஆம் திகதிய இலக்கம் 4/10/22512 கடித மூலம் 30 வருடங்களுக்கு மேலாக குருநாகல் தனியார் கல்வி நிறுவனத்திற்கு நீண்ட | காணி உரித்தை கையேற்றல் தொடர்பாக சட்டரீதியான பிரச்சினைகள் காணப்படுவதுடன் நீதிமன்ற தீர்ப்பில் காணப்படுகின்ற வழக்கு தீர்ப்பின் பிரகாரம் மிகுதியை நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அறிவிக்கபட்டுள்ளது. | சட்டரீதியான பிரச்சினைகளைத் தீர்க்கப்பட்டதன் பின்னர் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த நிலுவை வாடகை பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கால அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டு இருந்ததுடன், இந்த காணி நெல் சந்தைப்படுத்தல் சபையின் வியாபார பணிகளுக்காக ஆரம்பகாலத்தில் கைப்பற்றபட்டிருந்தது. வாடகை அறவிடல் மற்றும் வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும்போது ஏற்பட்ட பிரச்சனையான நிலைமையின் அடிப்படையில் இந்த காணி மீண்டும் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கையளிக்கமாறு நீதிமன்ற தீர்ப்பின் மூலம் வெளியிடப்பட்டிருந்த போதும், தனியார் நிறுவனத்தால் காணியின் உரித்து பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்படாது இருந்ததுடன் வாடகைக்கு பெறும் போது அடிப்படையாக கொள்ளப்பட்ட வணிக நடவடிக்கைகள். தற்போது வரையில் உரிய காணிப் பகுதியில் அமுல்படுத்தப்படாத இருந்ததுடன் காணியின் உரித்து வாடகைக்கு பெற்ற தரப்பினரால் வைக்கபட்டிருந்தது. உரிய காணி நீண்டகால வாடகைக்கு வழங்கிய திகதியில் இருந்து வாடகை பணம் மற்றும் அதன் அடிப்படையில் வட்டியாக ரூபா 4,800,000 மேலும் அறவிடவேண்டி இருந்தது.

### 1.5.10.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆராய்ச்சிகட்டுவ பிரதேச செயலகத்தில் குசல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள 100 ஏக்கர் அரசாங்கத்தின் காணி ஒன்று தனியார் கம்பனி ஒன்றுக்கு நீண்டகால அடிப்படையில் வாடகை உடன்படிக்கையுடன் வாடகைக்கு வழங்கப்பட இருந்ததுடன், 1997 ஆம் ஆண்டு முதல் வாடகையை செலுத்தாது புறக்கணித்தமையினால் அரசாங்கத்தின் காணி | கம்பனிக்குரிய நபர்கள் இதுவரையில் கண்டறிய முடியாது இருந்தமையும் உரிய வாடகை பணத்தை அறவிடுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ளதாக அறிவிக்கபட்டுள்ளது. | விரைவாக நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் வாடகை செலுத்தாது புறக்கணித்தவர்களை சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் அல்லது நிலுவை வாடகை மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டளைச் சட்டத்தின் 87 ஆம் பிரிவின் கீழ் 2004 சனவரி 26 ஆம் திகதி பிணை முறி இரத்துச்செய்யப்பட்டிருந்ததுடன், 2013 மே 30 ஆம் திகதி வரையும் அறவிடவேண்டிய நிலுவை வாடகை மற்றும் தண்டப்பண வட்டி ரூபா 36,587,033 ஆக கணிப்பிடப்பட்டிருந்ததுடன், அந்த பணத்தை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | அதற்குரிய தண்டப்பணம் வட்டியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் மனத்தீவு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குரிய 29 ஏக்கர் 10 பேர்ச் அளவான அரசாங்கத்தின் காணி 1988 யூன் 29 ஆம் திகதி முதல் 30 வருட காலம் தனியார் கம்பனிக்கு நீண்டகால ரீதியில் வாடகைக்கு வழங்கப்படுகின்றது. அந்த தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்ட காணி அந்த கம்பனி மாகாண காணி ஆணையாளரின் அங்கீகாரம் இன்றி 2008 யூன் 11 ஆம் திகதி வரையும் தனியார் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. | 2014 சனவரி 08 ஆம் திகதி புத்தளம் பிரதேச செயலாளருக்கு மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் அடிப்படையில் சட்டரீதியற்ற அடிப்படையில் காணி உரித்தாக்குதலை உரிய பிரகாரம் உரித்தாக்குவதற்கும் உரிய பிரகாரம் வாடகைப் பணம் செலுத்தாதிருந்ததன் அடிப்படையில் வாடகை உடன்படிக்கையை இரத்து செய்யுமாறும் கோரி இருந்த சந்தர்ப்பத்தில், 2014 சனவரி 29 திகதியை தனியார் கம்பனி மூலம் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையையும் அடிப்படையாக கொண்டு பிரச்சினையான நிலமையை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டு இருந்தமையும், 2023 ஏப்ரல் 17 ஆம் திகதி காணி ஆணையாளர் நாயகத்தால் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த வாடகை இரத்து செய்யும் கட்டளையை கைவிடுமாறு | உரிய கம்பனியால் அங்கீகாரமின்றி உரிய காணி தனியார் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருக்குமாயின் அந்த கம்பனிக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிவிக்கப்பட்டு இருந்தமையும், அதன்பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது ஏற்பட்ட பிரச்சினையான நிலமை மற்றும் உரிய தரப்பினரிடமிருந்து கோரிக்கையையும் கவனத்தில் கொண்டு காணி ஆணையாளரின் ஆலோசனையின் அடிப்படையில் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளபடுவதாகவும் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | புத்தளம் பிரதேச செயலக பிரிவில் மண்ணத்தீவு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குரிய 20.234 ஹெக்டயர் அளவான அரசாங்கத்தின் காணி 1993 பெப்ரவரி 24 ஆம் திகதி 30 வருட காலத்திற்கு தனியார் கம்பனிக்கு நீண்டகால அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021 மே 28 ஆம் திகதியில் உள்ளவாறு அறவிடவேண்டிய வேண்டிய நிலுவை வாடகைப் பணம் ரூபா 1,753,228 ஆகும். அவ்வாறே இந்த வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் அது 2023 பெப்ரவரி 24 ஆம் திகதி முடிவடைந்து இருந்ததுடன், அத் திகதி வரை கம்பனியில் இருந்து அறவிட வேண்டிய மொத்த நிலுவை வாடகை மற்றும் தண்டப்பணம் ரூபா 505,602 ஆக இருந்தமையும் அதனை அறவிடுவதற்கு புத்தளம் பிரதேச செயலகத்தால் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மேலும் அறவிடவேண்டிய நிலுவை தொகை நிலுவை பணம் ரூபா 305,127 ஆக இருந்ததாக அறிவிக்கபட்டுள்ளது. | உரியர் தனியார் கம்பனியில் இருந்து அறவிடவேண்டிய நிலுவை வாடகைப் பணம் மற்றும் தண்டப்பணம் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.11 தலைப்பு 230 - வடமேல் மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு. மகளிர் அலுவல்கள் மற்றும் சபை அலுவல்கள் தொடர்பான மாகாண அமைச்சு.**

**1.5.11.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதற்கு திகதியை திறைசேரி பிரதி செயலாளரின் 2017 டிசம்பர் 21 ஆம் திகதிய இலக்கம் 02/2017 என்ற சுற்றறிக்கை இன் பிரகாரம் அரசாங்கத்தின் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் பயன்படுத்தப்படுகின்ற அரசாங்கத்திற்குரிய சகல வாகனங்களிலும் அந்த நிறுவனத்தின் பெயர் பதிவுசெய்யபட்டிருந்தமை வெளிப்படுத்தபட்டிருந்த போதும். சுகாதார அமைச்சுக்கு சொந்தமான ரூபா 70,200,000 ஆன 07 வாகனங்களின் பதிவு உரித்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வடமேல் மாகாண பிரதேச பிரதம செயலாளருக்கு சொந்தமான 06 வாகனங்களின் பதிவு உரிமத்தை கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், இலக்கம் KR-3391 என்ற ப்ராடோ வாகனத்தின் பதிவு உரித்து வடமேல் மாகாண விவசாய அமைச்சுக்கு சொந்தமாக காணப்பட்டது. அது அந்த வாகனத்தின் பதிவு உரித்தை கையளிப்பதற்கு வடமேல் மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகளும் மேற்கொள்ளபடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களின் பதிவு உரிமத்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.12 தலைப்பு - 231 சுகாதார சேவைகள் திணைக்களம்.**

**1.5.12.1 நோக்கங்களுக்கு புறம்பான செயற்பாடுகள்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2023 ஆம் ஆண்டிற்கான வடமேல் மாகாண சபைக்குரிய ஆரம்ப சுகாதார சேவை வலுப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,511,398,023 தொகையில் இருபது மில்லியன் மதிப்பீட்டு | மாகாண சுகாதார சேவைகள். கட்டிட தொகுதிக்குரிய நுழைவு வீதியை நிர்மாணிப்பதற்கு உரிய பழைய. பாதுகாவலர் கொட்டகை. அதன் சேவையில் ஈடுபடுகின்ற பாதுகாப்பு | செயற்திட்டத்தை ஆக்கபூர்வமானதாக, ஆக்கபூர்வமாக நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் பொருளாதார ரீதியில் செயற்திறனாக |

| | | | |
|---|---|---|---|
| | தொகை சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு உடன்படிக்கை மூலம் நிர்மாணிப்பதற்காக. அங்கீகரித்து ரூபா 14,355,803 தொகையில் ஒப்பந்தகாரருடன் 2023 ஒக்டோபர் 12 ஆம் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. PSSP செயற்திட்டம் மூலம் மேற்கொள்ளப்படும் நிறைவேற்ற வேண்டிய தேவையான பணிகள் நிறைவேற்றபடாமல் செயற்திட்டத்தின் நோக்கங்கள் அல்லாத நோக்கங்களுக்கு உரித்தற்ற மற்றும் அத்தியாவசியமற்ற சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தின் நுழைவு வீதியை நிர்மாணிக்கும் பணிகளுக்காக நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு இலகுவான வகையில் மனித வள அதிகார சபையின் கோரிக்கையை கவனத்தில் கொண்டு கவனத்தில் கொண்டதன் பின்னர் திட்டமிடப்பட்டு புதிய நிர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பழைய வீதியை விரிவாக்குதல் மற்றும் நாளாந்த தேவையின் போது ஏற்படுகின்ற நிரந்தர இடையூறுகளை நீக்குவதற்கும் புதிய வீதி திட்டமிடப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ஆ) | PSSP (ஆரம்ப சுகாதார சேவை முறைமையை வலுப்படுத்தும் செயற்திட்டம்) நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கம் மற்றும் செலவினங்களை தொடர்புபடுத்துகின்ற குறிகாட்டிகள் DLI சரியாக அர்த்தப்படுத்த விளங்கிக் கொள்ளாமை. இனால் மீளாய்வு ஆண்டில் ரூபா 28,252,376 பெறுமதி உடைய அடி ஆரம்ப நோக்கங்களுக்கு இணங்காத வகையில் 05 நிர்மாணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கொள்வனவு 03 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டது. | PSSP வேலை விடயங்கள் மற்றும் கொள்வனவு செய்வதற்காக வருடாந்த திட்டம் சமர்ப்பித்து செயற்திட்ட பணிப்பாளரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் நிறைவேற்றப்படுகின்றது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப் பட்ட சகல வேலை விடயங்களும் நேரடியாக ஆரம்ப சுகாதார சேவை முறைமையை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் நோக்காக கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை ஆக்கப்பூர்வமான நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நிறைவேற்றுதல் வேண்டும். |

### 1.5.12.2 எதிர்பார்த்த பூர்த்தி (Out put) பெற்றுக்கொள்ளபடாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வைத்தியசாலை சுகாதார தகவல் முறைமை. தகவல் முகாமைத்துவ (HHIMS) முறைமை. வைத்தியசாலையில். ஒவ்வொரு பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையில் ஸ்தாபிக்கப்பட வேண்டி இருந்த போதிலும். தம்பதெனிய கல்கமுவ, நிக்கவரட்டிய வைத்தியசாலைகளில் ஸ்கேன் அலகு, சத்திரசிகிச்சைக்கூடம், ஆய்வுகூடத்தை உள்ளடக்கிய சகல பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையில் அந்த முறைமை ஸ்தாபிக்கப்படமையினால் அந்த HHIMS முறைமை ஸ்தாபிக்கும் நோக்கமான. நோயாளர்களுக்கு உடனடி சேவைகளை விரைவாக மற்றும் இலகுவாகவும் மேற்கொள்ளும் நோக்கம் தொடர்பில் அடையப்படாது இருந்ததுடன். தம்பதெனிய, கல்கமுவ மற்றும் நிக்கவரட்டிய வைத்தியசாலைகளுக்காக வழங்கப்பட்ட 22 மடி கணணிகள். 20 வாசிக்கும் குறியீடுகள், 02 அச்சிடல் இயந்திரங்கள். 04 ஸ்டிக்கர் பிரிண்டர்கள் மற்றும் 15 ஸ்டிக்கர் ரோல்கள் என்பன விளைவற்று காணப்பட்டது. | கணக்காய்வு ஐய வினாவிற்காக பதில் பிரதேச சுகாதார பணிப்பாளரிடமிருந்து கிடைக்காதிருந்தமையால் அதற்காக விரைவாக பதில் பெற்று சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை நிறைவேற்றும் போது பொருளாதார ரீதியில், செயற்திறனாக மற்றும் ஆக்கபூர்வமான முறையில் எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்து கொள்வதற்கு முடியுமான வகையில் நிறைவேற்றுதல் மற்றும் விளைவற்ற பயனற்ற உபகரணங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.12.3 விளைவற்ற குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) குருநாகல் மாவட்டத்தில் நிக்கவரட்டிய, தம்பதெனிய என்ற 02 ஆரம்ப வைத்தியசாலைகள் மற்றும் நாரமல பிரதேச வைத்தியசாலைகளில் விடுதி. தங்கியிருக்கும் நோயாளர் வாட்டுகல் மற்றும் ஏனைய பிரிவுகளில் தேவைகளுக்காக போதியளவான உயிரியல் | கொரோனா தொற்றுநோய் காலத்தில் பல்வேறு நிதி நிறுவனங்கள் மூலம் நன்கொடை யாகவும் மற்றும் பரிசை சுகாதார அமைச்சினால் உயிரியல் மருத்துவ உபகரணங்கள் பகிர்ந்தளித்ததில் மிகையான உபகரணங்கள் வைத்தியசாலையில் | சத்திர சிகிச்சை உபகரணங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (அ) | கல்கமுவ அரசாங்கத்தின் பண்ணையில் காணப்படுகின்ற 2022 ஆம் ஆண்டின் பெப்ரவரி 02 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட ரூபா 3,662,756 பெறுமதியான வெங்காய களஞ்சியம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் பயனற்று காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | பயனற்ற சொத்துக்களை உரிய நோக்கங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வன்னிகம ஒன்றிணைந்த பண்ணை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தில் மீளாய்வாண்டில் மொத்த வருமானம் ரூபா 12,575,277 ஆக இருந்ததுடன் மொத்த மீன்டெழும் செலவினம் மற்றும் மூலதன செலவினங்கள் முறையே ரூபா 34,007,822 மற்றும் ரூபா 1,543,609 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் மீன்டெழும் செலவினத்தை வெளிப்படுத்துவதற்கு போதியளவான வருமானம் பண்ணையினால் உழைக்கப்பட்டிருக்கவில்லை. | வன்னிகம பண்ணைக்கு அண்ணளவாக சில வருடங்களின் வருமானத்தின் பிரகாரம் 2022 முதல் 2024 வரை மாதாந்த சராசரி வருமானம் அண்ணளவாக இரண்டு மடங்காகி இருந்தது. இந்த முறையில் எதிர்காலத்திலும் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கான திட்டத்தின் பிரகாரம் தற்போது அமுல்படுத்தப்படுகின்றது. அந்த முறையில் எதிர்காலத்தின் போதும் மீன்டெழும் செலவினங்களில் முதலீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பண்ணையின் நடவடிக்கைகளை முறையான பிரகாரம் திட்டமிட்டு வருடாந்தம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை உழைப்பதற்கும், மீன்டெழும் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.5.22.3 விடய இலக்கம் 25003 வாரியபொல திசு ஆய்வுகூட வணிக முற்பண கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பல வருட காலம் முதல் திசு வளர்ப்பு ஆய்வுகூட வணிக முற்பணக் கணக்கிற்குரிய செலவினங்களை தீர்த்துவைப்பதற்கு போதியளவான வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு முடியாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையில் பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 7,077,921 ஆகும். | வணிக முற்பணக் கணக்கிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வருமானத்தை அதிகரிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மாவத்தகம தெனவர்வத்த அரசாங்கத்தின் பண்ணையில் 2019 ஆம் ஆண்டு முதல் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற ஒட்டு மர ஆய்வுகூடம் அமைந்துள்ள வளவில் அளவில் உரித்தை கையேற்றல் மறறும் அதன் பெறுமதியை மதிப்பிட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | காணி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் 2024 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கி குறிப்பிடுவ தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | பயன்படுத்தப்படுகின்ற காணிகளின் உரித்து கையேற்பதற் கும் அதன் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடும் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.22.4 விடய இலக்கம் 26002 என்ற வடமேல் மாகாண பயிற்சி நிறுவனத்தின் வணிக முற்பணக் கணக்கு.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 100 KVA மூன்று சுற்று மின்சார இயந்திரமொன்று 2022 மார்ச் 28 ஆம் திகதி வடமேல் மாகாண பயிற்சி நிறுவனத்தில் ஸ்தாபிப்பதற்காக ரூபா 15,922,298 | இன்று வரையிலும் மின் பிறப்பாக்கி இயந்திரத்தின் சகல பழுதுபார்த்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் | நிலையான சொத்துக்களை செயற்திறனாக பயன்பாட்டில் ஈடுபடுத்துதல் |

| | | |
|---|---|---|
| பிரதம செயலகத்தால் செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 02 ஆம் திகதி வரையிலும் அது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்பாட்டிற்கு எடுக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

**1.5.23 ஏனைய முற்பணக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணத்தின் கீழ் அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 1,430,298,716 ஆகும். | 2024 ஆம் ஆண்டில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.24 வடமேல் மாகாண மனிதவள அபிவிருத்தி அதிகார சபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மனிதவள அபிவிருத்தி அதிகார சபையால் 2006 – 2017 காலப் பகுதியில் 08 செயற் திட்டங்களுக்காக 178 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 24,286,413 கடன் தொகையில் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா 7,502,349 அறவிட வேண்டி காணப்பட்டது. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கடன் மீதிகளுக்குரிய 2023.05.31 ஆந் திகதி காணப்பட்ட ரூபா 8,992,220.00 ஆன தொகை 2023.12.31 ஆந் திகதி வரையில் ரூபா 7,502,349.00 வரை குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. | நீண்டகால நிலுவை கடனை தாமதமின்றி அறவிடல் வேண்டும். |
| (ஆ) அதிகாரசபையால் மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதி வரையில் 193 தனி நபர் கடன்களுக்கா வழங்கப்பட்ட ரூபா 24,786,413 தொகையில் 05 வருடங்களை விஞ்சி 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவைத் தொகை ரூபா | 2023.05.31 ஆந் திகதி காணப் பட்ட ரூபா 12,430,165 ஆன தொகை 2023.12.31 ஆந் திகதி வரையில் ரூபா 10,489,462 வரை குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது. மேலும் 2024 ஆம் ஆண்டில் | நிலுவை கடன் தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 7,821,459 அதாவது 32 சதவீதம் மற்றும் அதற்குரிய வட்டி ரூபா 2,668,003 ஆகும். | அறவீடுகளை வலுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு இது வருடாந்த அபிவிருத்தி திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையினால் சுத்திகரிப்பு சேவை வழங்கியருந்த 64 நிறுவனங்களில் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 390,732,589 தொகையில் ரூபா 167,161,682 அறவிடப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | மொத்த வருமானத்தையும் உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார மஹகெதர விடுமுறை விடுதியில் 27 சந்தர்ப்பங்களுக்குரிய மண்டப வாடகை மற்றும் அரை வாடகை வருமானம் ரூபா 434,700 அறவிடப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.25 வடமேல் மாகாண ஜனகலா மன்றம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்திற்கு கடந்த காலங்களில் தரமான மற்றும் பொறுப்பு வாய்ந்த சிறந்த வருமான வழியான ‘‘ஶ்ரீ சுப மங்களம்’’ சேவை வருமானம் அல்லாத நிலைமைக்கு உட்பட்டமை, வடமேல் மாகாண போட்டி ஒலி முறைமை வாடகைக்கு வழங்கும் வருமானத்தை அதிகரிப் பதற்கான நடவடிக்கைகள் எடுக்காமை, கோப்போர் கூடத்தின் வருமானத்தை உழைப்பதற்கு | வயம்ப ஜனகலா மன்றத்தின் கலாசாரப் பிரவின் வருமானத்தை உழைக்கும் செயற்திட்டமாக அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களில் 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை இலக்கும் பல்வேறு காரணங்களில் அடிப்படையில் அடைந்துகொள்வதற்கு | வருமானங்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை எடுக்காமை, திறந்த நடன மேடை ஊடாக வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை என்ற விடயங்களின காரணமாக வருமானம் வீழ்ச்சியடைந்திருந்தது. | முடியாதிருந்தது. | |
| (ஆ) 2023 ஆம் ஆண்டின் போது விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட மொத்தப் பெறுமதியான ரூபா 20,794,508 ஆன பொருட்களில் 45 சதவீதம் அதாவது ரூபா 9,283,361 ஆன பொருட்கள், மன்றத்திற்குரிய கொள்கை விஞ்ஞாபனத்தின் நோக்கங்களுக்கு இணங்காத வகையில் வடமேல் மாகாணத்திற்கு வெளியில் உள்ள வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்காக ஜனகலா மன்றத்தின் பிரதான வருமான வழியான விற்பனை கடை வருமானங்களை உயர்த்தும் நோக்கில் ஏனைய அரச மற்றும் தனியார் துறைகளின் விற்பனைக் கடைகளுடன் போட்டியிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்பட்டிருந்தது. | மன்றத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். |

**1.5.26 முன் சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகாரசபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வடமேல் மாகாணத்தின் சகல முன்பள்ளி பாடசாலைகளும் வடமேல் மாகாண முன்சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு வடமேல் மாகாணத்தில் செயற்படுகின்ற 2152 முன்பள்ளி பாடசாலைகளில் 910 முன்பள்ளி பாடசாலைகள் பதிவு செய்யப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள முன்பள்ளி பாடசாலை களின் எண்ணிக்கையில் 42 சதவீத நிறுவனங்கள் ஒழுங்கு | இந்த 386 முன்பள்ளி பாடசாலைகளான சர்வதேச இலக்காகக் கொண்ட முன்பள்ளி பாடசாலைகள், அதிகார சபையின் அனுமதி மற்றும் உரிய நியமங்கள் இன்றி ஆரம்பிக்கப்பட்டுள்ள முன்பள்ளி பாடசாலைகள் ஆகும். விஞ்ஞாபனத்தில் இந்த முன்பள்ளி பாடசாலைகளுக்கு எடுக்க வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகள் குறிப்பிடப் படாதிருந்தமையால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்த போதிலும் | முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிறுவனங்களை பதிவு செய்ய வேண்டியிருந்ததுடன் அதற்கு இணங்காத நிறுவனங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் விஞ்ஞாபனங்களைத் திருத்துவதன் மூலம் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2003 இன் 04 ஆம் இலக்க முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி அதிகார சபை விஞ்ஞாபனத்தின் முன்பள்ளி பாடசாலையில் நியமமின்றி ஆரம்பிக்கும் போது அதனை மூடுவதற்கான அதிகாரம் இல்லாமை, முன்பள்ளி பாடசாலைகள் 02 வருடங்களுக்கு ஒரு தடவை பதிவினைப் புதுப்பிக்க வேண்டியிருந்தமைக்கு எடுக்கப்பட்ட முகாமைத்துவத் தீர்மானம் அமுல்படுத்தப்படாமை, முன்பள்ளி பாடசாலைகள் ஆரம்பித்தல் மற்றும் விடுமுறை வழங்குதல் தொடர்பாக பொதுக்கொள்கை ஒன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியா திருந்தமை, தகைமையின்றிய முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் உதவியாளர்களாக நியமிக்கும் போது அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் காணப்படாமை போன்ற விடயங்கள் தொடர்பாக சட்ட ரீதியான ஏற்பாடுகள் காணப்படாமையால் சட்டத்தில் குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்தல் தொடர்பாக பிரச்சினையுடனான நிலைமை காணப்பட்டது. | வடமேல் மாகாண முன்பள்ளி சிறுவர் கல்வி அபிவிருத்தி அதிகார சபையின் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் முன்பள்ளி பாடசாலைகளை மூடுவதற்கான அதிகாரம் இல்லாதிருந்தமையால் விஞ்ஞாபனத்தை திருத்தியதன் பின்னர் இதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் முன்பள்ளி பாடசாலைகள் பதிவினை புதுப்பிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்து இதுவரை பதிவினை புதுப்பிக்கும் 54 விண்ணப்பப் பத்திரங்கள் கிடைத்துள்ளதாகவும் ஒவ்வொரு 02 வருடங்களுக்கும் ஒரு முறை பதிவினைப் புதுப்பிக்கின்றமையினால் மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை மாற்றியமைக்கக் கூடியதாக இருந்தமை விஷேட காரணங்களின் அடிப்படையில் பாடசாலைகளில் தவணை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் அதாவது முன்பள்ளி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் ஏதாவது சீராக்கங்கள் மேற்கொள்வதாயின் தற்போது முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி | முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிறுவனங்களில் பதிவு செய்ய வேண்டியிருந்ததுடன் அதற்கு இணங்காத நிறுவனங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவ தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் பொதுக் கொள்கையின் பிரகாரம் முடியுமான எல்லா செயற்பாடுகளும் மற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களை மாத்திரம் சேர்த்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உத்தியோகத்தர்களினால் கல்வி தகைமை பூர்த்தி செய்த உதவி ஆசிரியர்கள் மாத்திரம் சேர்த்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்குவதாகவும் அறிக்கப்பட்டுள்ளது. | |

**1.5.27 வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபையின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு சட்டரீதியான நிதி ஏற்பாடு இன்றி 2015 முதல் 2023 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் நிறைவேற்று படியாக ரூபா 4,525,000 செலுத்தப்பட்டிருந்தது. | இந்த படி இதற்காகவும் பரிசோதனைகள் மேற்கொண்டு விடயங்களை அறிக்கையிடுவதற்காக பரிசோதனைச் சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் 05/2017 சுற்றறிக்கை. வடமேல் மாகாண சபையின். நியதிச்சட்டப்படி 2017.10.25 திகதி முதல் உரித்தாக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அதற்கு முன்னைய காலப்பகுதிகளுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அறவிடல் தொடர்பான தகவல்கள் எதிர்காலத்தில் அறிக்கையிடப்படுவதாக அறிவிக்கபட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மாகாண சுற்றாடல் அதிகார சபையால் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.5.4 ஆம் பிரிவிற்கு முரணாக சட்டரீதியான ஏற்பாடுகள் இன்றி உதவிப் பணிப்பாளர் பதவியில் பதில் கடமைக்காக 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆண்டு வரை 03 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,326,163 செலுத்தபட்டிருந்தது. | i. வடமேல் மாகாண பிரதம செயலாளரின் 2023.01.25 ஆம் திகதிய NWP/CM/AD/11/6/5 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>ii. வடமேல் மாகாண பிரதம செயலாளரின் 2023.05.03 ஆம் திகதிய NWP/CM/AD/11/6/5 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>iii. 2022.09.26 ஆம் திகதிய NWP/CM/AD/11/6/5 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க பதில் கடமை நியமங்கள் மேற்கொண்டு நியமனங்கள் மேற்கொள்ள வேண்டி இருந்ததுடன் சட்டரீதியான நிதி ஏற்பாடுகள் இன்றி செலுத்தப்பட்ட பணம் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) வடமேல் மாகாண பிரதம செயலாளர். 2014 சனவரி 28 திகதிய 01/2014 ஆம் இலக்க சுற்றறிக்கை 1.2.1 ஆம் பிரிவு மற்றும் திருத்தங்களுக்கு இணங்காத வகையில். வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளரால். உத்தியோகபூர்வ வாகனமாக ஒதுக்கப்பட்டிருந்த வாகனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி. ரூபா 1,007,363 பெறுமதியான எரிபொருள் லீட்டர் 2401.3 பெறப்பட்டிருந்தது. | உத்தியோகபூர்வ வாகனமாக ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும் அதிகார சபையில் வாகனங்கள் பற்றாக்குறை யின் அடிப்படையில் ஒதுக்க வாகனம் ஒன்றாக தொடர்ச்சியாக பயன்படுத்துவதற்கு ஏற்பட்டதன் காரணமாக கௌரவ ஆளுநரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கபட்டுள்ளது. | மேலதிகமாக பயன்படுத்தப்பட்ட எரிபொருள் பொருட்களின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.28 வடமேல் மாகாண பிரதேச வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------------- | ----------------------------- | -------------------------- |
| (அ) 2001 இன் 01 ஆம் இலக்க, வடமேல் மாகாண பிரதேச | பதிலளிக்கப்படவில்லை. | சட்டங்கள், விதிகள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | வளங்கள் அபிவிருத்தி அதிகார சபை விஞ்ஞாபனத்தின் 23(1) ஆம் பிரிவின் பிரகாரம் வடமேல் மாகாண சபையின் பணி நடைமுறை விதி. கோவை இன் IX ஆம் அத்தியாயத்தின் 115 ஆம் பிரிவு மற்றும் தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.3 ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில் பிரதேச வளங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ பணிப்பாளர் பதவியின் பதில் கடமைக்காக விவசாய அமைச்சின் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு 2017 யூன் 01 முதல் 2023 நவம்பர் 30 வரை ரூபா 1,572,148 செலுத்தப்பட்டிருந்தது. | | பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச வளங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் நிரந்தர பதவி அணியினருக்காக. கடன் உத்தேச திட்டத்தின் நியதி சட்டங்களுக்கு இணங்காத வகையில் பதில் கடமைக்காக தற்காலிகமாக நியமிக்கப் பட்டிருந்த விவசாய அமைச்சின் 06 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 600,000 கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த 06 உத்தியோகத்தர்களும் விவசாய அமைச்சின் மேலும் இடர் கடன் பெற்றிருந்தனர். | இந்த நியதிச்சட்ட அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் 2015.04.29 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த கால எல்லையில் காணப்பட்ட நிதி நெருக்கடிகளைக் கவனித்த நிதி நிலைமையினை கவனத்தில் கொண்டு இந்த எல்லையிலும் எல்லை மற்றும் நிபந்தனைகளை விதித்து விதிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த இந்த கடன் பெறப்பட்டமைக்கு கணக்காய்வினால் காண்பிக்கப்பட்டுள்ள 06 உத்தியோகத்தர்களும் அதிகாரசபைக்கு கீழ் நியமிக்கப்பட்டு மற்றும். பதில் கடமை அடிப்படையில் சேவையாற்றிய போதிலும் அந்த உத்தியோகத்தர்களும் அரசாங்கத்தின் நிரந்தர ஊழியர்கள் ஆகும். எனினும் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் | நிரந்தர உத்தியோகத்தர்கள் அல்லாது நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பிரதேச வளங்கள் அபிவிருத்தி அதிகார சபை விஞ்ஞாபனத்திற்கு முரணாக கடன் வழங்குதல் மேற்கொள்ள முடியாது. |

| | | |
|---|---|---|
| | இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**1.5.29 வடமேல் மாகாண கைத்தொழில் சேவை பணியகம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமேல் மாகாண கைத்தொழில் சேவை பணியகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று இன்றி 2013 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டுவரை 17 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 10,936,955 மற்றும் ரூபா 9,773,857 ஆக சம்பளமாக ரூபா 20,710,812 கூட்டு மொத்தமாக செலுத்த பட்டிருந்தது. | கைத்தொழில் சேவை பணியகத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் படி இந்த ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கான சம்பளம் மற்றும் படிகளும் செலுத்தப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்பு நடை முறையினை அங்கீகரித்து உரிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஹெரலியாவல கர்மாந்தபுரயில் அமுல்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் சேவை பணியகத்துடன் 20 வருட காலங்களுக்காக கைச்சாத்திடப்பட்ட வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் வருடாந்த வாடகை ஒவ்வொரு வருடமும் மே 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டி இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு 16 நிறுவனங்களுக்கு உரிய கூட்டு மொத்தமான ரூபா 957,897 வாடகை உரிய நிறுவனத்தின் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு திகதி வரையில் குத்தகை வாடகையாக ரூபா 957,897.00 அறவிட அறவிடவேண்டி இருந்த போதிலும் தற்போது வரையில் அதாவது 2024 ஏப்ரல் மாதம் வரையில் ரூபா 303,048.10 அறவிடப்பட்டுள்ளது என்பதை. விருப்பத்துடன் அறியத் தருகின்றோம். இந்த திகதி வரையில். குத்தகை வாடகை. நிலுவை ஏன் அளவும். நிலுவைத் தொகை ரூபா 699,552.43 வரை குறைக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் மிகுதி தொகையையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கபடுவதாக எடுக்கப் படுகின்றது எனவும் அறியத்தருகின்றோம். | நிலுவைப் பணம் உரிய நிறுவனத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஹெரலியாவடி கர்மாந்தபுரயில் அமுல்படுத்த படுகின்ற செயற்படுகின்ற 57 நிறுவனங்களில் 56 நிறுவனங்களுக்குரிய 2023 ஆம் ஆண்டின் டிசம்பர் 31 உள்ளவாறு கூட்டுமொத்தமாக ரூபா 955,194 நீர் பட்டியலை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு திகதி வரையில் நிலுவை நீர்ப்பட்டியல். ரூபா 955,194.00 அறவிட வேண்டி இருந்ததுடன் தற்போது வரையில் அதாவது 2024 ஏப்ரல் 31 ஆம் திகதி வரையில் ரூபா 236,338.66 மீதி ஒன்று மீதிவரை குறைக்கப்பட்டுள்ளது. மீதி மிகுதி நிலுவை மீதியையும் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைப் பணத்தை உரிய நிறுவனங்களில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் 24 ஆம் திகதிய பணிப்பாளர் சபை பத்திரத்தின் இலக்கம் 05 ஆம் பகுதியின் பிரகாரம் ஹெரலியாவடி கருநாத்தபுரயில் தற்போது செயல்படுகின்ற மற்றும். செயல்படாத நிறுவனங்களின் மூலம் 2006 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரிய கைத்தொழில் அபிவிருத்தி நிதியம் (IPF) இற்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 3,299,488 அறவிடப்பட்டிருக்க வில்லை. | அது தொடர்பாக எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கபடும் என குறிப்பிடுகின்றோம். அதற்கு மேலதிகமாக இது தொடர்பாக பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளை அமுல்படுத்துவதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய தொகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மாகாண நிதி விதி 261.2.2 இற்கு இணங்காத வகையில் ரூபா 100,000 ஆக கூடிய எல்லை இனை விஞ்சி பணியகத்தின் 06 உத்தியோகத்தர்களுக்கு 20 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 3,668,900 உப கட்டு நிதி வழங்கப்பட்டிருந்தது. | இவ்வாறான தொகை முற்பணமாக செயற்திட்டங்களுக்கு உரியதாக பங்கு பற்றுவர்களின் நாளாந்த கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்பதை உறுதியாக உறுதிப்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மாகாண நிதி விதியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட எல்லையின் கீழ் வருகின்ற பிரகாரம் முற்பணம் வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டின் போது கைத்தொழில் சேவை பணியகத்தால் அமுல்படுத்தப்பட்ட PLASTICS செயற்திட்டத்திற்காக பயன்படுத்துவதற்கு அந்த செயற்திட்டத்தின் நிதியத்தை ஈடுபடுத்தி ஒரு வருட காலத்திற்காக மாதாந்தம் ரூபா 240,000 வாடகை அடிப்படையில் வருடாந்தம் ரூபா 2,880,000 பெறுமதியில் டோயோட்டா வகையின் டபிள் கெப் வண்டி ஒன்று பிரதான ஒப்பந்த வேலைகள் மற்றும் கொள்வனவு செய்யும் பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த பெறுகைக் குழுவின் உள்ளடக்கத்தில் குழு அங்கத்தவராக வடமேல் மாகாண பிரதம அமைச்சின் பிரதான கணக்காளர் மற்றும் பணிப்பாளர் (செயற்திட்ட முகாமையாளர் மற்றும் ஆலோசனை சேவை) உள்ளடக்கி இருக்க வேண்டிய போதிலும் அந்த உத்தியோகத்தர்களில் பணியகத்தில் சேவையில் ஈடு பட்டிருக்கின்ற உத்தியோகத்தர்கள் மாத்தரம் பங்குபற்றி பெறுகைக் குழு நடவடிக்கை எடுத்திருந்தது. டபிள் கெப் வண்டியின் பெறுகைகளின் போது பெறுமதி சேர் வரியின்றி ஆகக் கூடிய மாதாந்த வாடகை ஒரு வாகனத்திற்கு ரூபா 165,000 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும் பணியகத்தால் மாதாந்த வாடகை ரூபா 240,000 வீதம் செலுத்துவதற்காக கெப் வண்டி ஒன்று பெறுகைகளின் மூலம் 2023 ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் திசம்பர் வரை | பெறுகைக் குழு அங்கீகாரத்தின் கீழ் மாதாந்த வாடகையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அதில் ரூபா 675,000 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (எ) | ரூபா 2,914,000 ஆன கொடவெல ஆடைக் கைத்தொழில் நிலையத்தின் கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமையை நவீனமயப்படுத்துவதற்குரிய பணியகம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தால் 2021 செப்டெம்பர் 21 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இந்த செயற்திட்டம் 2021 நவம்பர் 20 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமையும் உரிய பணிகள் குறித்துரைத்த பிரகாரம் நிறை வேற்றி அந்த முறைமையை அமுல்படுத்தும் மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு கைத்தொழில் சேவை பணியகம் தவறியமையின் காரணமாக இரு தரப்பினரின் இணக்கப் பாட்டின் அடிப்படையில் இறுதிக் கொடுப்பனவுகள் இன்றி இந்த பணிகள் முடிவுறுத்தப்பட்டி ருந்தது. அதற்குரிய கணக்காய்வுத் திகதி வரையிலும் பணியகத்திற்கு கிடைத்த வருமானம் ரூபா 2,039,800 ஆக இருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டு முதல் 2023 வரை ரூபா 2,495,023 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற் திட்டத்தின் மூலம் கைத்தொழில் சேவை பணியகத்திற்கு ரூபா 455,223 நட்டம் ஏற்பட்டிருந்தது. | இரு தரப்பினரினதும் பிரச்சினை அல்லது இடையூறு இல்லாத வகையில் உரிய இலக்குகளை இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டில் முடிவுறுத்துவதற்கு முடியுமாக இருந்ததுடன் அதன் மூலம் எமது நிறுவனத்திற்கு எந்தவொரு நிதி ரீதியான நட்டமும் ஏற்படாமல் இருப்பதற்கு உரிய உத்தியோகத்தர்கள் கண்காணித்திருந்தனர். எனினும் இந்த பணிகளின் மூலம் நிறுவனத்திற்கு எந்தவொரு நிதி ரீதியான நலனும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை செய்வதற்கு முதல் நிறுவனத்தின் இயலுமை மற்றும் வலுவினை வலு தொடர்பாக நம்பிக்கைக்கு உட்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | கைத்தொழில் சேவை பணியகத்திற்குரிய மோட்டார் வாகனத்தை விற்றுத் தீர்ப்பதற்காக வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகார சபையின் மூலம் 2022 செப்டெம்பர் 28 ஆந் திகதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,500,000 இற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. வாகனத்தின் பொதுவான நிலைமை (General Condition) இன் கீழ் குளிரூட்டல் வசதி (Cooling System) திருப்திகரமாக இருந்ததாக மதிப்பீ செய்யப்பட்டிருக்கும் போது 2022 ஆம் ஆண்டின் மோட்டார் வண்டியின் வளிப் பதனாக்கி இயந்திரத்தை திருத்துவதை உள்ளடக்கி ஏனைய பழுதுபார்த்தலுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 150,470 கைத்தொழில் சேவை பணியகத்தினால் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வாகனத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நிலைமையின் அடிப்படையில் விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் மேலதிகமாக ரூபா 150,470 செலவினமொன்றைச் செய்த பின்னர் ரூபா 3,283,766 தொகையில் விற்பனை செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 216,234 நட்டம் ஏற்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்ட HV 9875 ஆம் இலக்க வாகனம் விற்றுத் தீர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்காக கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் சில மாதங்கள் எடுத்ததை ஏற்றுக்கொள்கின்றோம். முதலாவது மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்ட திகதி முதல் கவனத்திற்கொள்ளக்கூடிய ஓட்டத்தில் மேற்கொள்ளப்பட்டமையால் மீண்டும் கேள்வி கோருவதற்காக செலவாகின்ற தொகையையும் கவனத்திற் கொண்டு கேள்விக் குழு அங்கீகாரத்தின் கீழ் அந்தத் தொகைக்கு HV 9875 ஆம் இலக்க வாகனம் விற்றுத் தீர்க்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை விற்றுத் தீர்ப்பதற்கு முன் விற்றுத் தீர்க்க வேண்டிய சொத்துக்கள் என்ன என்பது தொடர்பாக தெளிவாக இனங்காண வேண்டியிருந்ததுடன் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய நிலைமையில் காணப்படுகின்ற சொத்துக்களை இயலுமான வரை பயன்படுத்துவதற்கும் விற்றுத் தீர்ப்பதாயின் நிறுவனத்திற்கு மிகவும் நலன்வாய்ந்த விதத்தில் மேற்கொள்ளல் வேண்டும். |

### 1.5.30 வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகார சபைக்குரிய கட்டிடத்தில் நடாத்திச் செல்லப்படுகின்ற ஹோட்டல் பாடசாலை 02 வருடங்களுக்கு வாடகைக்கு வழங்கும் போது மதிப்பீட்டு அறிக்கை பெறப்படாமல் மாதாந்தம் ரூபா 200,000 இற்கு வாடகை உடன் படிக்கையில் 2021 திசம்பர் 27 ஆந் திகதி பொருட்கள் உபகரணங்களுடன் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 சனவரி 10 ஆம் திகதி பொருள் உபகரணங்களுடன் கட்டிடத்தின் மாதாந்த வாடகை 360,000 ஆக மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக மதிப்பீட்டு வாடகையினை விட குறைந்த தொகையில் உடன்படிக்கை செய்யப்பட்டமையால் 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்குரியதாக வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகார சபைக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் ரூபா 3,840,000 ஆகும். | அசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கையின் படி ரூபா 360,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இலங்கை சுற்றாடல் மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகளைக் கவனத்திற் கொண்டு அவர்களால் 25 சதவீத பாடநெறிகளை நடாத்திச் செல்வதால் வடமேல் மாகாணத்தை உள்ளடக்கி ஏனைய மாகாண மாணவர்கள் தமது தொழில் இயலுமை விருத்தி செய்து கொள்வதற்கு சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது. மேலும் இந்த சுற்றாடலில் உள்ள பாதுகாப்பு செலவினம் மின்சாரம் மற்றும் ஏனைய சிறிய பராமரிப்பு நடவடிக்கைகள் அவர்களால் மேற்கொள்ளப்படுகின்றமையால் வாடகையாக ரூபா 280,000 தொகை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் சொத்துக்களை மூன்றாம் தரப்பினருக்கு கையளிகும் போது அரசாங்கத்தின் மதிப்பீடொன்றைப் பெற்ற பின்னர் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1993 செப்டெம்பர் 16 ஆம் திகதிய 1993 இன் 01 ஆம் இலக்க வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட் 10 நோக்கங்களுக்கு இடையே எந்தவொரு நடவடிக்கையும் இந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முன்னர் காணப்பட்ட பணிகளுக்கு உரியதான நோக்கங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இந்த நோக்கங்களை திருத்தி விஞ்ஞாபனத்தின் பிரகாரம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படு வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.31 வடமேல் மாகாண இயந்திர உபகரண அதிகார சபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாடகைக் கட்டணம், வாகன பழுதுபார்த்தல் கட்டணம், சேவை நிலையக் கட்டணம் மற்றும் சிவில் வேலைக் கட்டணமாக கிடைக்க வேண்டிய மீதிகளில் மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 63,212,432 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் தீர்த்துவைக்கப்படாமல் காணப்படுகின்ற கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 10,427,151 ஆகும். | இந்த பணம் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் வடமேல் மாகாண பிரதம அமைச்சின் மூலம் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் அந்த பரிந்துரையை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.5.32 பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபை.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2013 ஆம் ஆண்டு முதல் 2023 டிசம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு உரியதாக அதிகாரசபைக்கு கிடைக்கவேண்டிய மாதாந்த ஓட்ட அட்டவணை பத்திரக் கட்டணம் ரூபா 13,490,500 மற்றும் தாமதக்கட்டணம் ரூபா 2,706,150 என்பவற்றை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | இந்த பணத்தை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் வடமேல் மாகாண பிரதம அமைச்சின் மூலம் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் அந்த பரிந்துரைகளை வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | கிடைக்க வேண்டிய மாதாந்த ஓட்டஅட்டவணை பத்திர கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2019 ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய மேலதிக பிரயாண தடவை. வருமானம் ரூபா 2,863,000 மற்றும் தாமத கட்டணம் ரூபா 798,800 என்பவற்றை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய மேலதிக பிரயாண தடவை வருமானம் ரூபா 2,863,150 மற்றும் தாமதக்கட்டணம் ரூபா 798,800 மீதியில் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு மேலதிக | கிடைக்க வேண்டிய மேலதிக பிரயாண தடவை வருமானங்களை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | | பிரயாண தடவை வருமானம் ரூபாய் 151,000 மற்றும் தாமதக்கட்டணம் ரூபா 34,100.00 அறவிட அறவிடப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (இ) | 2013 ஆம் ஆண்டு முதல் 2023 டிசம்பர் வரை கிடைக்க வேண்டிய நுழைவுப் பத்திர வருமானம் ரூபாய் 2,162,900 மற்றும் தாமத கட்டணம் ரூபா 390,750 என்பவற்றை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2013 ஆம் ஆண்டு முதல் 2023.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நுழைவுப் பத்திர வருமானம் ரூபா 2,162,900 மற்றும் தாமத கட்டணம் 390,750 மீதியில் சிலாபம் பஸ், பேருந்து கம்பனிக்குரிய மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகளில் இருந்து அறவிட முடியாத மீதி ரூபா 451,000 மற்றும் தாமத கட்டணம் ரூபா 45,100 ஆக காணப்பட்டது. மிகுதி ரூபா 1,711,900 மற்றும் தாமத கட்டணம் 345,650.00 தொகையில் 2024 மார்ச் 31 ஆண்டில் உள்ளவாறு நிறைவு பத்திர வருமானம் ரூபா 31,900.00 மற்றும் தாமத கட்டணம் ரூபா 5,950 அறவிடப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய வருமானங்களை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2011 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கிடைக்க வேண்டிய புதிய அனுமதிப்பத்திர கட்டண வருமானம் ரூபா 3,621,000 அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய புதிய அனுமதிப்பத்திர கட்டணத்தில் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையில் ரூபா 825,000 அறவிடப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டுவரை அறவிடவேண்டிய ரூபா 2,096,000 உரிய வீதி அனுமதிப்பத்திரம் இரத்து செய்யும் நிலையில் காணப்பட்டது. | கிடைக்க வேண்டிய வருமானங்களை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதிவரையில் பதிவுசெய்த 1374 பேருந்து வண்டிகளின் வண்டிகள் எண்ணிக்கையில் இருந்தபோதிலும் பதிவுசெய்த சாரதிகளின் எண்ணிக்கையை 882 மற்றும் பதிவுசெய்த | 2024 ஏப்ரல் 26 ஆந் திகதி வரையில் பதிவுசெய்த சாரதிகளின் எண்ணிக்கையை 955 உம், 2024 ஏப்ரல் 26 இல் உள்ளவாறு பதிவுசெய்த நடத்துனர்களின் எண்ணிக்கை 905 அறிக்கையிடப்பட்டுள்ளது. | நடத்துனர்களை பதிவு செய்து கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடத்துனர்கள் எண்ணிக்கை 816 ஆனமையால். 492 சாரதிகளும், 558 நடத்துனர்கள் பதிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதமையின் காரணமாக அதிகாரசபைக்கு உழைக்கக்கூடியதாக இருந்த ரூபா 1,575,000 வருமானத் தை உழைப்பதற்கு முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் மேலும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) | 1995 இன் 04 ஆம் இலக்க பிரயாணிகள் போக்குவரத்து சேவை விஞ்ஞாபனத்தின் 28 ஆம் பகுதியின் பிரகாரம் யாராவது நபர் ஒருவருக்கு விநியோகிக்கப்படுகின்ற பிரயாணிகள். சேவை அனுமதிப் பத்திரம் ஏனைய நபருக்கு கையளிக்க முடியாதிருந்தது அவ்வாறு கையளித்தல், பூச்சியம் மற்றும் அதிகாரமற்றதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 50,250,000 பெறுமதியான 112 அனுமதிப் பத்திரங்கள் வேறு தரப்பினருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2018 இன் 07 இலக்க பிரயாணிகள் போக்குவரத்து சேவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் உரித்தை முறையாக முறைமைப்படுத்துவதற்காக அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அனுமதிப் பத்திரத்தை நாளது வரை ஆக்குவதற்கோ அல்லது காலாவதியான அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்து அதற்கு பதிலாக புதிய அனுமதிப்பத்திர விநியோகத்தை விநியோகிப்பதற்கே ா நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 1995 இன் 04 இலக்க வடமேல் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து சேவை விஞ்ஞாபனத்தில் 24(2) (ஆ) பந்தத்தின் பிரகாரம். சேவை அனுமதிப் பத்திரம். தின் செல்லுபடி காலம் ஒரு வருடம் மற்றும் முப்பது வருடம் மற்றும் 30(ஆ) பந்தியின் பிரகாரம் அனுமதிப் பத்திரம். செல்லுபடி ஆகின்ற திகதியில் இருந்து 12 மாத காலத்திற்காக அந்த அனுமதிப் பத்திரம். புதுப்பிக்க வேண்டுமென காண்பிக்கப்பட இருந்த போதிலும். 2019 ஆம் | 1995 இன் 04 இலக்க பிரயாணிகள் போக்குவரத்து சேவை விஞ்ஞாபநத்தின் பிரகாரம் அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்ட திகதியிலிருந்து இதுவரை உரித்தை முறைமைபடுத்தும் திட்ட முறைமை ஒன்று அமுல்படுத்தபடுவதுடன், அதன் மூலம் கணிசமான வருமானம் இப்போது அதிகார சபையினால் உழைக்கப்பட்டுள்ளது. | அனுமதிப் பத்திரத்தை நாளது வரை ஆக்குவதற்கோ அல்லது காலாவதியான அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்து அவை அவற்றுக்குப் பதிலாக புதிய அனுமதிப்பத்திர அனுமதிப் பத்திரத்தை விநியோகிப்பதற்கே |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு முதல் 2023 டிசம்பர் மாதம் வரை செல்லுபடியான காலத்தை விஞ்சி 102 அனுமதிப் பத்திரங்கள் காணப்பட்டதுடன் அந்த அனுமதிப் பத்திரங்கள் காலாவதியாகி 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரையிலான காலம் கடந்துருந்த போதிலும் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதமையால். ரூபா. 836,250 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | ா நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | மாகாணங்களுக்குள் நுழைகின்ற மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகளுக்காக லொக் புத்தகம் மற்றும் நுழைவு கட்டணம் அறவிடவதற்குரிய ஏற்பாடு. 1995 இன் 04 இலக்க வடமேல் மாகாண வீதி பிரயாணம் போகும் பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபை விஞ்ஞாபனத்தில் உள்ளடக்காமையின் காரணமாக சிலாபம் மற்றும் குளியாப்பிட்டி பேருந்து நிலையங்கள் ஊடாக பிரயாணம் செய்கின்ற மாகாணங்களுக்கிடையிலான பேரூந்துகளில் இருந்து அதன் கட்டணம் அறவிடமுடியாது காணப்பட்டதுடன், 2013 ஆம் ஆண்டு முதல் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை குளியாப்பிட்டி மற்றும் சிலாபம் பேரூந்து நிலையங்களுக்கு உரிய அறவிடமுடியாது காணப்படுகின்ற பத்திர கட்டணம் மற்றும் நுழைவு சீட்டு நுழைவு கட்டணம் முறையே ரூபா 6,148,000 மற்றும் ரூபா 451,000 ஆக இருந்ததுடன் அதற்குரிய அறவிடப்படாத தண்டப்பணம் ரூபா 889,500 தொகையையும் உள்ளடக்கி அறவிடவேண்டிய மொத்தத் தொகை ரூபா 7,516,500 ஆகும். | 1995 இன் 04 இலக்க விஞ்ஞாபனத்தின் சட்ட ரீதியான பின்புலத்தில் தயாரிக்கபடாது இருந்தமையால் இந்த மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. 2018 இன் 07 ஆம் இலக்க புதிய விஞ்ஞாபனத்தில் அதற்காக சட்டரீதியான பின்புலம் தயாரிக்கப்பட்டுள்ளது. | அறவிடவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | அதிகாரசபையின் செயற்பாடுகளை வெளிப்படையாகவும் முறையாகவும் பேணி செல்வதற்காக. 2018 செப்டம்பர் 15 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணணி கற்கை நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து ரூபா 13,589,198 செலவினத்தை செய்து ஸ்தாபிக்கப்பட்ட கணணி முறைமையின் பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகள் தொடர்பாக அந்த முறைமை ஸ்தாபித்த. கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணணி கல்வி பிரிவுடன் சேவை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் அந்த நிறுவனத்தின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் சேவை நடவடிக்கைகளுக்காக ஆகக் குறைந்த கூடிய சேவைக் கட்டணம் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கணணி முறைமையின் பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகளுக்காக கொழும்பு பல்கலைக்கழகத்துடன் சேவை உடன்படிக்கைக்கு முன்வராமையினால் இது தொடர்பாக குழுவொன்று நியமிக்கப்பட்டு அந்த அறிக்கை கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம். மென்பொருளுக்கு உரிய மிக எதிர்கால பராமரிப்பு மற்றும் சேவை நடவடிக்கைகள் தொடர்பாக பேராசிரியருக்கு வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டு உள்ளமையால் எதிர்காலத்தில் இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | விரைவாகவும் முறையாகவும் சேவை உடன்படிக்கைகள் கைச்சாத்திடவேண்டி இருந்ததுடன் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது பெறுகை சந்தர்ப்பங்களிலேய சேவை உடன்படிக்கைக்காகவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | 2011 ஆம் ஆண்டில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது பத்திரிகை அறிவித்தல் மூலம் கேள்வி கோரி ரூபா 19,287,700 பெறுமதியான 40 வீதி அனுமதிப்பத்திரங்கள் 05 வருடங்களுக்கு செல்லுபடியான காலத்திற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடி கால எல்லை 2016 ஆம் ஆண்டு முடிவடைந்த பின்னர் 2016 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது மீண்டும் கேள்வி கோருவதன் மூலம் ரூபா 38,575,400 | 2011 ஆம் ஆண்டில் வீதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு உரியதாக பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தல் இந்த அனுமதிப்பத்தி ரங்களின் செல்லுபடிக்காலம் 05 வருட காலமாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் பிரயாணி கள் போக்குவரத்து சேவை விஞ்ஞாபனத்தின் அல்லது சட்டக் கோவையின் வீதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக்காலம் 05 வருடங்களுக்கு வரையறுக்க வேண்டி யிருந்தமைக்கான | அனுமதிப்பத்திரத்தை கேள்வி கோருதல் மற்றும் அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலம் தொடர்பாக சட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகைக்கு அண்ணளவான தொகையை உழைக்கக்கூடியதாக இருந்த போதிலும் அந்த 40 அனுமதிப்பத்திரங்களையும் அல்லது மீண்டும் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிபந்தனைகளை விதிப்பதற்கு உரிய ஏற்பாடுகள் காணப்படாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் பின்னர் புதிய அனுமதிப்பத்திரம் கேள்வி கோரும் போது இந்த நிபந்தனை அகற்றப்பட்டுள்ளது. | |
| (ஓ) | சாரதி பயிற்சி பாடசாலையின் பயிற்சி நடவடிக்கைகளுக்காக 2006 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,500,000 ஆன அசோக் லேலண்ட் வகையின் பேரூந்து வண்டிகள் கனரக வாகன பயிற்சியாளர் ஒருவர் இல்லாதிந்தமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயிற்சி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப் படாமல் அதிகார சபையின் வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | தற்போது ஆலோசனை யாளர் இருவருக்கு சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தேவையான ஆலோசனையாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. சாரதி பயிற்சி பாடசாலைக்குரிய பேரூந்தின் மூலம் தற்போது கனரக வாகன பயிற்சியளித்தல் ஆலோசனையாளர் பற்றாக்குறையின் அடிப்படையில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள போதும் அந்தப் பேரூந்து வண்டியின் மூலம் தற்போது அரசாங்கத்துறை, தனியார்துறை மற்றும் நபர்களுக்காக விஷேட பயணங்களுக்காக வாடகை அடிப்படையில் வழங்குவதன் மூலம் மேலதிக வருமானம் உழைத்தல் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | விளைவற்றுக் காணப்படுகின்ற பேரூந்து வண்டிகளை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஔ) | பிரயாணிகள் போக்குவரத்து அதிகார சபையின் முன்னாள் தலைவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,156,506 தொகையை அறவிடுவதற்கு 2022 யூலை 02 ஆம் திகதிய NWP/MORD/ACC/01/24/5 என்ற அமைச்சின் | இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு விடயங்கள் சமர்ப்பிக் கப்பட்டுள்ளதுடன் முன்னாள் தலைவரால் உரிய காலத்தில் KX-6392 வாகனம் ஓடப்பட்ட ஓட்ட விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய பெறுமதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாளரின் கடிதத்தின் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (க) | 2014 செப்டெம்பர் 11 ஆம் திகதி நடைபெற்ற கணக்குக் குழுக் கூட்டத்தின் போது வீதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு ஒரு முறையான திட்டமொன்று தெரிவு செய்து வர்த்தமானியில் இடுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தத் தீர்மானம் வழங்கப்பட்டு 08 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டு முதல் வீதி அனுமதிப்பத்திரம் கேள்வி கோரல் முறையில் வழங்கப்படுகின்றது. | கேள்வி முறைமைக்கு மேலதிகமாக உரித்தை முறையாக முறைமைப்படுத்த வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படு கின்றமையால் ஒரு முறையான திட்டமொன்றை தெரிவு செய்து விதிகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.33 மீன்பிடி சவிய சுழற்சி நிதியம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | --------------------------------------------------- | ----------------------------------- | ------------------------------- |
| (அ) | மீன்பிடி சவிய சுழற்சி கடன் நிதியத்தை ஆரம்பிப்பதற்கான விஞ்ஞாபனத்தின் மூலம் அல்லது விதிக்கோவையின் மூலம் அல்லது அங்கீகாரமின்றி 2008 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | 2024 மார்ச் 13 ஆந் திகதிய அங்கீகரிக்கப்பட்ட விதிக்கோவை இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்கள் அந்த கணக்குகள் தயாரிப்பதற்குரிய கணக்கீட்டுக் கொள்கை மற்றும் ஏனைய விளக்கமளித்தல்கள் 2024 ஆம் ஆண்டுல் முதல் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களுடன் கணக்கீட்டுக் கொள்கை மற்றும் ஏனைய விளக்கமளித்தல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீன்பிடி சவிய சுழற்சி கடன் நிதியத்தின் மூலம் வழங்கப்பட்ட கடனை கீழ் ஏதாவது குறித்துரைத்த திகதியில் காலாவதியான அல்லது அறவிடுவதற்கு நிலுவையாக உள்ள கடன் தொடர்பான தகவல்களை இனங்காணப்பட்டிருக்கவில்லை. இனங்காணப்படாதிருந்த துடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் மீன்பிடி சவிய சுழற்சி கடன்பட்டோர் மீதி ரூபா 16,432,416 ஆகும். | கடன்பட்டோர் வங்கிக்கு கடன் செலுத்தப் படாதிருக்குமாயின் உரிய காலாண்டின் இறுதியில் மீள் நிதி கடன் வட்டி மற்றும் தவணைப் பண சுழற்சி கடன் நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுகின்றது. குறித்துரைத்த பணம் கணக்கிற்குரிய கால எல்லையில் செலவு வைக்கப்பட்டிருந்ததா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பொருத்மான திட்டமொன்று அமைச்சு மட்டத்தில் தயாரிக்கப்படுவதுடன் தேவையான உடன் கணக்காய்விற்கு அறிக்கையிடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி குறித்துரைத்த காலப் பகுதியில் கிடைக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.34 விவசாய தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி சுழற்சி நிதியம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | -------------------------------------------- | ---------------------------------- | ----------------------- |
| (அ) | மாகாண நிதி விதி 151.1 இன் பிகாரம் சகல கொடுப்பனவுகளுக்காகவும் கொடுப்பனவு உறுதிச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சுழற்சி நிதியத்தின் முகாமைத்துவத்தால் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்காமல் மீளாய்வாண்டின் போது ரூபா 273,475 செலவினத்திற்காக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படுகின்ற சகல செலவினங்களுக்காகவும் உறுதிச்சீட்டுக்கள் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை எதிர்காலத்தில் சகல கொடுப்பனவுகளுக்காகவும் கேள்வி தயாரித்தல் மேற்கொள்ளப்படுவ தாகவும் உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மாகாண நிதி விதி 151.1 இன் பிரகாரம் சகல கொடுப்பனவுகளுக்காக வும் உறுதிச்சீட்டுகள் சமர்ப்பிக்கப் படல் வேண்டும். |
| (ஆ) | வடமேல் மாகாண விவசாய அமைச்சின் சுழற்சி கடன் உத்தேசத் திட்டத்திற்காக சட்ட விதிக் கோவை இலக்கம் | விவசாய தொழில் முயற்சியாளர்களுக்கு அபிவிருத்தி சுழற்சி கடன் நிதியத்திற்கான | சுழற்சிக் கடன் உத்தேச திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் |

| | | |
|---|---|---|
| 03 இன் சுழற்சி கடன் முன்மொழிவுத் திட்டத்தின் 11 நோக்கங்கள் காண்பிக்கப்பட்டதுடன் அதில் கீழே குறிப்பிடப்படுகின்ற 08 நோக்கங்களை நிறைவேற்று வதற்கான தெளிவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நோக்கமிடப்பட்ட நீண்ட கால நோக்கமாக இருந்ததுடன் இதுவரையில் அந்த நோக்கங்களை நிறைவேற்று வதற்காக தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.35 நீர்ப்பாசன நிலைபேறான பராமரிப்பு நிதியம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக வடமேல் மாகாணத்தின் விவசாய பராமரிப்பு நடவடிக்கைகள் குளங்களாக குருநாகல், புத்தளம் மாவட்டத்தில் 46 பிரதேச செயலகப் பிரிவுகளில் 1092 குளங்கள் இனங்காணப்பட்டு அதில் ஒவ்வொரு குளத்திற்காகவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப் பீட்டின் பிரகாரம் பராமரிப்பு செய்வதற்கான மொத்த கிரயம் ரூபா 25,818,424 ஆனமையால் 2014 இன் 02 ஆம் இலக்க நீர்ப்பாசன விஞ்ஞாபனத்தின் III ஆம் அத்தியாயத்தின் 35(1) பிரிவின் பிரகராம் மதிப்பீட்டுக் கிரயத்தில் 50 சதவீதம் அதாவது ரூபா 12,909,212 தொகை நீர்ப்பாசன நிலைபேறான பராமரிப்பு நிதியத்தில் இருந்து செலுத்தவேண்டியிருந்தமையும் நிதிக் கூற்றுக்கள் பராமரிப்பு செலவினமாக ரூபா 1,911,051 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் நிதி செயலாற்றல் முன்னேற்றம் பராமரிப்பு நிதியக் கணக்கில் காண்பிக்கப்படாதிருந்தமையால் இதன் பின்னர் மீன்டெழும் செலவின விடயங்களில் இருந்து கிடைக்கின்ற பணம் இந்த நிதியத்தின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு உரிய ஆண்டில் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2024 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகளில் சரிசெய்வதற்கும் குறிப்பிட்டுக் கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) 2022 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் செலுத்த வேண்டிய சிறிய நீர்ப் பாசன பராமரிப்பு செலவினம் ரூபா 16,415,846 | 2024 ஆம் ஆண்டு முதல் குறித்த காலப் பகுதியில் செலுத்துவ தற்குரியதாக சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன் | செலுத்த வேண்டிய சிறிய நீர்ப்பாசன பராமரிப்பு செலவினங்களை உரிய பிரகாரம் நீர்ப்பாசன |

| | | | |
|---|---|---|---|
| | ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அதில் ரூபா 6,307,142 மாத்திரம் பணமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 10,108,704 ஆன எஞ்சிய மீதி முன்னைய ஆண்டின் திரண்ட நிதியத்தில் சரியான அதிகார பலமின்றி சீராக்கப்பட்டிருந்தது. | பிரகாரம் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் 2022 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய மீதி மிகை மதிப்பீட்டிற்கு உட்பட்டு இருந்தமையால் கணக்குகளில் சரிசெய்வதற்கு திரண்ட நிதியத்தில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தவறுகளினால் அதற்காக உரிய அதிகார பலத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் கணக்காய் வில் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் உரிய அதிகார பலத்தைப் பெற்றுக்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி குழுவிற்கு குறித்துரைத்த பிரகாரம் வழங்குதல் வேண்டும். |
| (இ) | 2014 இன் 02 ஆம் இலக்க நீர்ப்பாசன விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக நீர்ப்பாசன நிலைபேறான அபிவிருத்தி நிதியத்தில் இருந்து நிதியைப் பயன்படுத்தாமல் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 56,416,541 முதலீடு செய்யப்பட்டிருந்தது. | 2014 இன் 02 ஆம் இலக்க நீர்ப்பாசன விஞ்ஞாபனத்தின் பிரகாரம் விஞ்ஞாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்று வதற்கு உள்ள வருமான வழிகள் பாதிப்படைந்திருந்தமையால் அவசர இடர் பராமரிப்பு கொடுப்பனவுகளுக்காக இந்த நிதியத்தை ஈடுபடுத்துவதற்காக முதலீடு செய்யப்பட் டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | விஞ்ஞாபனத்திற்கு இணங்க உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.36 கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நாத்தாண்டி பயிற்சி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது இந்த நிதியத்திலிருந்து ரூபா 72,635,253 செலவிடப்பட்டிருந்த போதிலும் காணியின் சட்ட | நாத்தாண்டி பயிற்சி நிலையம் ஸ்தாபிக்கப்பட்ட காணி கூட்டுறவு அமைச்சிற்கு சொந்தமாக இருந்ததுடன் அந்த காணியின் உரித்தை கையேற்கும் பொது நிருவாக பிரச்சினைகள் எழுந்திருந்ததையாலும் மற்றும் அந்தக் காணியைக் கையேற்றல், மூலதனச் சொத்துக்களை | விரைவாக உரித்தைக் கையேற்று சொத்துக்களின் பெறுமதியை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரீதியான உரித்து நிதியத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட செலவினம் நிறுனம் கூட்டுறவு நிதியத்தின் சொத்தாக கணக்கீடு செய்வதற்காக கௌரவ ஆளுநரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப டுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிதியத்தின் மூலம் 15 கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்கும் போது 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு 21 மாதங்களுக்கும் 220 மாதங்களுக்கு இடையிலான காலம் கடந்திருந்த போதிலும் அதற்காக அறவிட வேண்டிய நிலுவைக் கடன் மீதியான ரூபா 51,588,060 பெறுமதியை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிலுவைக் கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |